ஸ்ரீலங்கா தலைமை அஞ்சலகத்தில் பதிவுபெற்றது

# தர்க்கீகம் 6

உழைக்கும் வர்க்கங்கள் அடிமைப் புத்தியுடைய எடுபிடிகளாக அல்லாமல், தமது பொறுப்பை நன்குணர்ந்து கபடதாரிகளான தமது எஜமானர்கள் யுத்தத்தை ஆதரித்து கூக்குரலிட்டுக் கொண்டிருக்கும் போது சமாதானத்தை நிலைநாட்டும் ஆற்றல் கொண்ட சுதந்திர நாயகர்களாக அரங்கில் பிரவேசிக்கும் காலம் வரும்.

— மார்க்கஸ்

சித்திரை 1981 | மேதின சிறப்பிதழ் | விலை ரூபா 1-00

# ஈழ கோரிக்கையும் மாவட்ட சபைத் தேர்தலும்!

இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்களின் எதிர்காலம் என்ன? நடக்கவிருக்கும் மாவட்ட சபைத் தேர்தல்மூலம் நம்மவரின் நலன் உரிமைகளை, உடமைப்பாட்டு ரீதியில் உறுதிப்படுத்தலாமா? ''இல்லை'', என்ற தொனியில் ''அபிவிருத்தியும் விடுதலையும்இணைந்து இயங்க முடியாது'' என்கிறார் மறைந்த கோப்பாய்த்தொகுதி பா. உ. திரு. கதிரவேற்பிள்ளை (சுதந்திரன் 22-02-81) ஆனால் தலைவர் அமிர்தலிங்கமோ யூன் மாதத்தில் மாவட்ட அபிவிருத்திச் சபைகளுக்கு நடக்கப்போகும் தேர்தலில் வெற்றி பெற்றுப் பெரும் பான்மையான சபைகளைக் கைப்பற்றுவதே தமிழர் விடுதலைக் கூட்டணியின் அடுத்த குறிக்கோள்' என்கிறார் (சாவி 8-2-81).

''தலை அசையாமல் வால் அசைவது சரியல்ல'' என்று சொல்லிவைத்த தந்தையின் மைந்தர்களுக்கிடையிலே கருத்து முரண்பாடு இருந்தாலும், இவர்கள் விரும்பினாலோ விரும்பாவிட்டாலோ மாவட்ட சபைத் தேர்தல் நிச்சயம் நடக்கப்போகிறது. இதில் ஈழக் கோரிக்கையைப் பிரதிபலிக்கச் செய்யாவிட்டால் 1977-ம்ஆண்டு தேர்தல்மூலம் இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்களால் பிரகடனப்படுத்திய ஈழக் கோரிக்கை அர்த்தமற்ற தொன்றாகிவிடும். இதனால்தான் 'தர்க்கீகம்' ''இன்றைய பிரச்சனை 'மாவட்ட சபை' பற்றியதல்ல ஈழக் கோரிக்கை பற்றியதே'' என அழுத்தமாக வற்புறுத்தி வருகிறது. ஆகவே இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் எதிர்காலம் என்ன எனக் கேட்க முற்படும்போது இன்றைய நிலைப்பாட்டையும் நன்கு புரிந்துகொள்ள வேண்டும்- புரிந்துகொள்ளும் வகையில்தான் மாவட்ட சபைத் தேர்தலின் தாக்கம் அமையும்.

மாவட்ட சபையைப்பற்றி ''ஜனாதிபதிக் கமிஷன் அறிக்கை'' ஒன்று பெப்ரவரி 1980 லும், பின் இதையொட்டிய மாவட்ட சபைச் சட்டமொன்று ஆகஸ்ட் 1980லும் அரசாங்கத்தால் வெளியிடப்பட்டிருக்கிறது. இதுபற்றி இதுவரை காலமும் ''அபிவிருத்தியும் விடுதலையும் இணைந்து இயங்கமுடியாது'' என்று சொல்பவர்களால் ஒரு விளக்கமான விவாதமோ, அல்லது விமர்சனமோ தரப்படவில்லை. இதற்கும் ஈழக் கோரிக்கைக்கும் உள்ள இடர்ப்பாட்டை இம்மியளவு கூட எடுத்து முன்வைக்கவில்லை, அப்படி வைத்திருப்பார்களானால், ஜனாதிபதி கமிஷனின் உறுப்பினர்களான ஜனாப் ஏ. சி. எம். அமீர், ஜனாப் ஏ. எம். ஏ. அசீஸ் ஆகியோர் ''தமது ஐயப்பாடுகள் என்ற தலைப்பில் கமிஷன் அறிக்கையில் வெளியிட்ட எண்ணப்பாடுகளுக்கு விடையளித்திருப்பார்கள். அமீர்—அசீஸ் ஆகியோரின் ஐயப்பாட்டின்படி, வடகிழக்கு மாகாணத்திலும், ஏனைய பகுதிகளிலும் வாழும் இஸ்லாமியர் தமிழ் மொழியைப் பேசுவோராயினும் தமிழர்களுக்கென்ற 'தேசிய அந்தஸ்து','தனிநாடு' என்ற தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் அபிலாசைக் கோரிக்கைக்குப் புறம்பானவர்களே என்பதாகும். இதன் தார்ப்பரியத்தையோ, அல்லது ஐயப்பாட்டின் விபரீதத்தையோ இதுவரைகாலமும் விளக்கப்படவில்லை. விளக்கப்பட்டிருந்தால் 1956ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில், ''இலங்கை என்ற சமஷ்டி அமைப்பிற்குள் வடகிழக்கு மாகாணத்தைக் கொண்ட நிலப்பரப்பில் 'தமிழரசு' நிறுவுவதற்கான கோரிக்கையை முன்வைத்து சாதி—மதம் என்ற எண்ணப்பாட்டிற்கு அப்பாற்பட்டு மொழிவாரி இன அடிப்படையில் கல்முனையில் காரியப்பரையும், பொத்துவிலில் முஸ்தபாவையும், மூதூரில் மஜீத்தையும் தமிழரசு கோரித் தேர்தலில் தேர்ந்தெடுத்தனுப்பியவர்கள் இஸ்லாமிர்களென்பதையும், அண்மையில், ''கல்லோயா'' அபிவிருத்தி என்ற பெயரிலும், அம்பாறை போன்ற இஸ்லாமியரின்பாரம்பரிய குடிநிலம் பறிபோன போது குரல் கொடுத்ததும், பின் குடியேற்றத்தைத் தடுத்துப் போராடியதும் தமிழரசுக் கட்சியே'' என்ற மசூர் மௌலானாவின் கூற்றைப் போன்ற பல ஆதாரங்களைக் காட்டி இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களில் மதத்தால் முஸ்லிம்களானாலும் அவர்கள் தம் இதய வேட்கையும் ஈழம் என்பதை எடுத்துக் காட்டியிருக்க வேண்டும். அப்படியான எந்த ஆய்வுகளையும் அல்லது அரசியல் வாதங்களையும் இந்த அரசியல் ''தங்கக் கம்பிகள்'' தரவில்லை. பிறநாடுகளில் முக்கியமாக பெரிய பிரித்தானியாவில் இதுபோன்ற சூழ்நிலைகள் ஏற்படும்போது, அவ்வப்போது அரசியல் கட்சிகள் ஆழ்ந்த ஆய்வுகளும், அறிக்கைகளும் திட்டங்களும் வெளியிடுவதையும் அதையொட்டியே மக்கள் தீர்ப்பளிப்பதையும் பரவலாகப் பார்க்கக்கூடியதாக இருக்கிறது. உதாரணத்திற்குப் பெரிய பிரித்தானியாவின் முக்கிய பிராந்தியப் பகுதிகளான ''ஸ்கொட்லாந்து'', 'வேல்ஸ்'' போன்ற மக்களுக்குப் பிரித்தானிய பாராளுமன்றம் பிராந்திய அதிகாரம் வழங்குவதா? இல்லையா? '' என்பது பற்றிப்

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

# மேதின வரலாற்றுப்பாதையில் ஈழவரின் சுவடுகள்...?

மனித சமுதாயத்தின் மேடுபள்ளங்களையும், ஓட்டை ஓடிசல்களையும் விஞ்ஞானக் கண்கொண்டு நோக்கி, இந்தித்து, அவற்றின் பொதுவான தன்மைகளைப் புரிந்து, மீண்டும் சமுதாயத்தின்மீது அதனைத் தகுந்தபடி பிரயோகப்படுத்த வேண்டியதே ஒரு புரட்சிவாதியின்—மார்க்சியவாதியின்- தட்டிக் கழிக்க முடியாத கடமையாகும். இதற்கு சமுதாயம் குறித்த விஞ்ஞானக் கண்ணோட்டத்திலும், செயல்முறை அல்லது போராட்டம் பற்றிய அறிவிலும், தடுமாற்றமற்ற தெளிவு அவசியமானது. சமுதாய வளர்ச்சியில் தெளிந்த பார்வை உடைய ஒருவர் போராட்டங்களை வகுக்கும் போது, மேதின வரலாறும் தவிர்க்கமுடியாதபடி படிக்கப் படவேண்டியதாகிறது.

## நாம் இருக்கும் சமூக அமைப்பு

ஒன்றுக்கொன்று எதிரானதும் இடையறுத உட்பூசல்களை உடையதுமான, வர்க்கமுரண்பாடுடைய சமுதாய அமைப்பிலேயே ஈழவராகிய நாம் இன்று இருக்கிறோம். இம்முதலாளித்துவ சமூக அமைப்பு முறையின் பிரதான ஒரு கூறு தொழிலாளர்கள், விவசாயிகள், உதிரிப் பாட்டாளிகள் ஆகியோரைக் கொண்டிருக்கிறது. மற்றைய கூறு இவர்களை நசுக்கி சொகுசாக வாழும் இலங்கை முதலாளிகள், அன்னிய ஏகாதிபத்தியவாதிகள், அவர்களின் அடிவருடிகள் ஆகியோரைக் கொண்டிருக்கிறது. எனவே ஈழவர்கள் முதலாளித்துவ ஏகாதிபத்திய எதிரிகளையும் அவர்களின் பூச்சாண்டி வித்தைகளையும் புரிந்து, எதிர்த்துப் போராட வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார்கள். ஈழவரின் போராட்டக்கட்டத்தில் மேநாளும் அத்தியாவசிய நாளாகும்.

## மேதின வரலாறு

முதலாளித்துவ அமைப்பு முறை உலகில் சில நூற்றாண்டுகளுக்கு முன்பே தோன்றியது. அதன் ஆரம்பக் காலங்களில் தொழிலாளிகள் பல துறைகளிலும் பலவீனமுற்றிருந்ததால் வாய்மூடி, மௌனிகளாக, தமது பெரும் உழைப்புகளை முதலாளிகளின் வீட்டில் குவிக்கவேண்டி இருந்தது. காலப்போக்கில்ஏறத்தாழ 19ம் நூற்றாண்டின் முற்பகுதியில்- சிற்சில இடங்களில் முளைகிளம்பிய விழிப்புணர்வுகள் தமக்கே உரிய தவிர்க்கமுடியாத, வேலை நிறுத்தப் போராட்டங்களாக உருவெடுத்தன.

ஆரம்பத்தில் கூலி உயர்வு கோரியே அநேக வேலைநிறுத்தங்கள் நடைபெற்றன. ஆயினும் விரைவில் கூலி உயர்வுக் கோரிக்கையிலும் குறைந்த நேர வேலை, தொழிற் சங்கம் அமைக்கும் உரிமை போன்ற கோரிக்கைகளே அத்தியாவசியமானதாகத் தெரியத் தொடங்கியது. அக்காலங்களில் 12,14 அல்லது 16 மணி நேரவேலை ஒரு நாளைக்கு ஒரு தொழிலாளியிடமிருந்து உறிஞ்சப் பட்டது. சில தொழிலாளிகளிட

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

கருத்து மக்களைப் பற்றிக் கொண்டால், சக்தியாய் உருவெடுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அர்த்தமற்ற கண்ணோட்டம்

**ஐக்கிய அமெரிக்காவில் ஐந்து மாத காலம் விரிவுரையாற்றியும், சமாதான வேலைகளிலும் ஈடுபட்டிருந்த E. P தொம்சனின் ஆய்வுக் கட்டுரை (Guardian) யின் தொகுப்பு:**

ஐக்கிய அமெரிக்காவில் இன்றைய நிகழ்வுகள் திகிலூட்டக்கூடியவையாக உள்ளது. மத்திய (வகுப்பு) அமெரிக்கர் இன்று “பரபரப்பான பதட்டமான யுத்த மனநிலை” யில் அமிழ்ந்து விட்டார்கள். பொறுப்பற்ற பத்திரிகைகளால் கட்டவிழ்த்து விடப்பட்ட அறிவிலி தேசிய வாதிகளின் கட்டற்ற வளர்ச்சி வெளிப்பாட்டு அலையினால் அமெரிக்க ஜனாதிபதி றீகன் பதவிக்கு உயர்த்தப்பட்டார்.

இவை எல்லாவற்றிற்கும் உரிய பல்லவி இதுதான் : முதலில் வியட்னாமில், பின் ஒரு சில “ஈரானிய வெறிக் கூட்டத்தால்” அமெரிக்கா கர்வ பங்கப் படுத்தப்பட்டுவிட்டது. அமெரிக்கா இப்போது அங்கும் இங்குமாகத் தள்ளப்படுகின்றது. அமெரிக்க இராணுவம் ஒழுக்க நிலையற்று சிதறுகின்றது. படைக்கல அணிகளில் அமெரிக்கா வகித்த முதன்மையை “ருஷ்யர்கள்” களவாடிக்கொண்டார்கள். அமெரிக்காவை யாரும் திக்குமுக்காட வைக்கமுடியாது. றீகன் இவை எல்லாவற்றையும் தடுத்து அமெரிக்காவின் கௌரவத்தை மீண்டும் நிலைநாட்டப் போகின்றார். அமெரிக்கா தொழில்நுட்பத் துறையில் இன்றும் முதன்மையானது. இதை உபயோகிப்பதற்கு இதுதான் அரிய சந்தர்ப்பம். றீகனின் வழியில் யாராவது கம்யூனிஸ்டோ அல்லது நடுவுலக வாணர்களோ வந்தால் ...? அவ்வளவுதான். இதுதான் இன்றைய அமெரிக்க தேசியவாதிகளின் பல்லவி,

இந்தத் தேசியவாதப் பெரும் அலையும், முற்றிலும் உண்மையற்ற—உண்மையில் அமெரிக்கா தவிர்ந்த வேறுநாடுகளுக்கு மதிப்பளிக்காத உலகக் கண்ணோட்டமும் இணைந்திருப்பதுதான் இன்றைய அமெரிக்காவின் நிலை. முற்போக்காளர் வட்டத்தைத் தவிர்ந்த மற்றைய அமெரிக்கர்களில் ஒரு சிலரால்தான் வல்லரசுகளுக்கிடையில் நடக்கும் போரில் வடஅமெரிக்கக் கண்டமும் எரிந்து சாம்பலாகிவிடும் என்ற உண்மையை விளங்கிக் கொள்ள முடிகின்றது.

மூன்று குறிப்பிடக்கூடிய விசயங்கள் திகிலூட்டுபவையாக உள்ளன. முதலாவது, எண்ணெய் வளத்தைப் பற்றிப் பேசும்போது அமெரிக்கர்களுக்கிடையில் ஒரு அச்சமூட்டுகின்ற நரம்புத்தளர்ச்சி இன்று தோன்றுகிறது. பாரசீக வளைகுடா என்றால் அது அமெரிக்காவிற்கு சொந்தமானது. அதாவது அது அமெரிக்கக் கடல். “ருஷ்சியர்கள்” அமெரிக்காவின் இந்தக் குரல்வளை நாடியை வெட்டிவிடத் துடிக்கிறார்கள் என்ற மனப்பாங்கு அமெரிக்காவில் வளர்க்கப்பட்டுள்ளது.

(உண்மையில் அமெரிக்கா பெரிய அளவில் எண்ணெயை கையிருப்பில் வைத்துள்ளது. அமெரிக்காவிற்கு தேவையான எண்ணெயில் 10% தான் மத்திய கிழக்கிலிருந்து வருகின்றது, இதைக்கூட பாவிப்பைக் குறைப்பதன் மூலம் சேமிக்கலாம்)

மத்தியகிழக்கில் இராணுவத் தலையீட்டிற்கான தயார் வேலைகளில் ஐரோப்பா சுணக்கம் காட்டுகின்றது என்று ஐரோப்பியர்களை அமெரிக்கர் குற்றஞ் சாட்டுகிறார்கள்.

அமெரிக்காவின் குரல்வளையைக் காக்கத் தயாராக இருக்கும் 10,000 பேர் கொண்ட “விரைவாக அணிவகுத்து விரைவுபெறும் அமெரிக்க அதிரடிப் படைப்பிரிவு” (U. S. Rapid diployment force) ஒன்றிற்கு ஐரோப்பாவில் புகலிடம் கொடுத்து அதற்கு பங்களிக்க வேண்டுமென்று ஐரோப்பியர்களை அமெரிக்கா கேட்கின்றது. மத்திய கிழக்கினூடாக இவற்றை நோக்கினால் “பாதுகாப்பிற்கும்”. “மேன்மை தங்கிய” ஏகாதிபத்தியத்தின் வம்புச் சண்டித்தனத்திற்கும் வித்தியாசம் தெரியாது.

இரண்டாவது, ஐரோப்பாவை அங்கும் இங்கும் தள்ளவும், நேட்டோ (NATO) நாடுகளை அமெரிக்காவிற்கு மேலும் பணிவானவையாக்கவும், கிழக்கு மேற்கு பகை நிலையை மேலும் கெட்டியாக்கவும் அமெரிக்கர்களுக்கிடையே ஒரு துடிதுடிப்பும், அருவருக்கத்தக்க விருப்பமும் ஏற்பட்டுள்ளது. போலந்தில் இந்த குளிர்பருவ நிலையில் சோவியத் ராணுவம் தலையிடவேண்டும் என்று நேட்டோ “கழுகுகள்” மிகவும் விரும்பி வேண்டி நின்றார்கள் என்று தெளிவாகத் தெரிகின்றது. இவர்கள் “ருஷ்யர்கள்” வரட்டும் என்று துடிதுடித்தார்கள். ஏனென்றால் தங்களுடைய இராணுவச் செலவதிகரிப்பு நியாயமானதுஎன்று மெய்ப்பித்துகாட்டவும், மேலும் இழிந்த நிலையிலுள்ள தங்கள் கருத்துப் பாங்கை உறுதிப்படுத்தவும்தான். தங்கள் நடவடிக்கைகளை சரியென மெய்ப்பிக்க “ருஷ்யர்”களின் நடவடிக்கை இவர்களுக்கு அவசியமாகிறது.

மூன்றாவது, போர்த்தளவாடப்போட்டியை “ஆழமான அமைப்பா”க வளர்ச்சியை உறுதிப்படுத்துவதாகும். இது மிகவும் ஆபத்தானது. நடிகர்களை அவர்களின் நடிப்புப் பகுதிக்கு கூவியழைப்பதைப்போல், இன்று உபஜனாதிபதி புஸ் (BUSH) சி.ஐ.ஏ. (C.I.A.)ல் இருந்தும் படைப்பெருந் தலைவர் (GENERAL) கேய்க் (HAIG) நேட்டோ அதிகாரத்திலிருந்தும் உலக அரங்கில் இன்று நுழைந்துள்ளார்கள்.

அமெரிக்க ஜனநாயகக்கட்சி, கேய்க் (HAIG)ன் நியமனத்தை எதிர்த்தபோது, அவரின் “WATER GATE”ல் அதிக ஈடுபாடில்லாத பங்கை மையமாகக் கொண்டார்களேதவிர இவர் நேட்டோவை புதுமைப் படுத்தவும், அதை தீவிரமான போர்ப்பாதையில் இட்டுச் செல்லவும் காரணகர்த்தா என்பதை சிறிதளவாகத்தான் பேசிக் கொண்டார்கள்.

கேய்க், “அரங்கப்போர்”, (THEATRE WAR) என்ற போர்முறையின் கர்த்தா மாத்திரமல்ல, அதை 1977-ல் நடந்த “வின்ரெக்ஸ்” (WINTEX) என அழைக்கப்படும் நேட்டோ பயிற்சியின் போது இப்படியான ஒரு போருக்கு ஒத்திகை நடத்தியவருமாவர், இதன்பின், போதுமான அளவு அதிர்ச்சியைக் கொடுத்து, எதிரியை மிரட்டி பின்வாங்க இணங்கவைப்பதற்கு நேட்டோ முதல் அணு ஆயுதத் தாக்குதலைப் பிரயோகிக்க வேண்டும் என்ற உத்தரவிற்கு உயர்படை அதிகாரியான கேய்க் கைச்சாத்திட்டார்.

இந்தப் படைப் பெருந்தலைவர், 5 விமானத்தளங்களை கிழக்கு ஜேர்மனியிலும், 5 விமானத்தளங்களை பல்கேரியாவிலும், மும்மூன்று விமானத் தளங்களை முறையே செக்கோஸ்லவாக்கியா, போலந்து, கங்கேரி ஆகிய நாடுகளிலும், வேறு சில பலபடைப்பிரிவு தங்குமிடங்களையும் மேலும் தாக்குவதற்கான குறிகளாக நியமித்தார். ருஷ்யா முதல் நேரத் தாக்கலின்போது தாக்கப்பட்டமாட்டாது.

இந்த மனிதர்தான் அமெரிக்காவின் இன்றைய ராஜதந்திரத்திற்குச் சிற்பியாவர். இந்த நாடகக் காட்சிப் பட்டியலில் முதலாவது தாக்கலின் பின் ஜனாதிபதியும், முதல் செயலாளரும் HOTLINE ல் தொடர்பு கொண்டு முழுவிவகாரத்தையும் கைவிட ஒத்துக் கொள்வார்கள். இந்த உலகில் நடப்பனவையும். பறக்கக்கூடியவையும், வளர்க்கக் கூடியவையும், நீந்தக்கூடிய யாவும் இந்த இரண்டு கிலிபிடித்த கேலியான கிழவரின் தீர்மானத்தின் தயவில்தான் தங்கியுள்ளது,

இப்போது கேய்க்கிடமிருந்து பொறுப்பேற்ற விசுவாசமுள்ள படைப்பெருந் தலைவர் றொஜேர்ஸ் (ROGERS), உயிர்களை அழிக்கும் ‘நியூட்டோன் வெடிகுண்டை (உயிரற்றவையை அழிக்காது) ஐரோப்பாவிற்கு விற்க முன்வந்துள்ளார். இந்த வெடிகுண்டைப் பற்றி விளங்கப்படுத்த இந்தக் குறுநகை புரியும் படைத்தலைவருக்கு தொலைக்காட்சியில் சிறந்தநேர அவகாசம் கொடுக்கப்பட்டது, இராணுவவீரன் என்றமுறையில் எதிரிகளுக்கிடையில் போடுவதற்கு இவருக்கு இந்த சின்ன அழகிய இரும்புச்சாமான் (நியூட்டோன் குண்டு) எவ்வளவோ தேவைப்படவுள்ளதாம். இதை உற்பத்திசெய்வதன் முழுநோக்கமும் என்னவென்றால் எதிரியைப் பயமுறுத்துவதற்குத்தான். உண்மையில் ஒருபோதும் இது பயன்படுத்தப் படமாட்டாதாம். (என்ன விந்தை!)

இந்த வெடிகுண்டுகளால் ஏற்படும் உயிர்ச்சேதங்களின் துர்நாற்றம் எமது எதிர்காலத்தில் வெகு தூரத்திலில்லை. இது எம்மை நோக்கிப் பாய்ந்து வருகின்றது. ஐரோப்பியர்கள் இதிலிருந்து தப்ப முயலும் போது அவர்கள் வழி எல்லாம் மேற்கு ஐரோப்பாவில் பயங்கரமான SS-20 ஆல் மூடப்பட்டிருக்கின்றது. (சோவியத் ஒன்றியத்தின் இந்த இராணுவ தளபாடம் உண்மையில் பெருகாமல் இருக்கலாம். ஆனால் இது மேற்கத்தைய நாடுகளின் ராஜதந்திரிகளின் புத்தகங்களில் பெருகிக்கொண்டே போகின்றது).

சிலசமயம் SS-20 பெருகிக் கொண்டும் போகலாம். ஆனால் இன்றைய அமெரிக்காவின் இராணுவ நடவடிக்கைகளும் அதன் பொறுப்பற்ற இராஜதந்திரமும் மிகவும் அச்சுறுவதாக இருப்பதனால், மேற்கத்தய சமாதான இயக்கமும் சோவியத் இராணுவ முனைப்பும் அச்சம் தரக்கூடிய தொன்று என்பதை மறந்துவிடக் கூடும். ஆயுதக் குவிப்பு பரஸ்பரமானது. அமெரிக்காவின் மான்கட்டனில் (MANHATTAN) நடந்த ஒரு சிறு கலந்துரையாடலின்பின் உலக சமாதான சபையின் செயலாளர் என்று தன்னை அறிமுகப் படுத்திக்கொண்ட ருஷ்யர் ஒருவர் நேட்டோவின் ஆக்கிரமிப்புத் திட்டங்களை சரியாக நான் பகிர்ந்தறிந்துள்ளேன் என்று போற்றிய அதே வேளையில், SS-20 ஐ சோவியத் ஒன்றியம் பெருக்குவதை நிற்பாட்ட வேண்டும் என்ற என் கருத்து தவறானது என்றார். வார்ஸோ (WARSAW) ஒப்பந்த நாடுகளின் பாதுகாப்பிற்கு SS-20 மிகவும் அவசியம் என்று அவர் தெரிவித்தார்.

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

## வெற்றுப் பேச்சை விடுத்து புறப்படு இன்று!

நீதான் தமிழன். நீ அமைப்பதுதான் தமிழனுடைய பண்பாடு. இதற்காக நீ புதைகுழியைத் தோண்டிக் காலத்தைப் போக்கிக் கொண்டிருந்ததுபோதும், புறப்படு. உலகிலுள்ள உண்மையான சமதர்ம நாடுகளில் மலர்ந்துள்ள புதிய சமுதாயங்கள் தங்களுடைய பழமையைப் பிரதிபலிப்பதாகவே அமைந்துள்ளன. இவற்றின் மத்தியில் பல்வேறு முரண்பாடுகளும் ஏன் மோதல்களும் கூடக் காணக்கூடியதாக இருக்கின்றது. இதே போல் தமிழனுடைய சமதர்ம சமுதாயமும் தனக்கே உரித்தான இயல்புகளையும், ஆற்றல்களையும், இலட்சணங்களையும் கொண்டதாக இருக்கும். நீ புதிய தமிழனுடைய சமுதாயத்தை அமைக்கப் புறப்பட்டுச் செயல் வீரனாகிச் செயல்படு. வெற்றுப் பேச்சு வீரர்களின் காலம் கடந்துவிட்டது. தமிழினம், தமிழினம் என்ற உனது வெறும் உணர்ச்சிகளும் பேய்ப் போக்கும் எதையும் தராது. தமிழர்களை வெறும் நடைப்பிணங்களாகத்தான் ஆக்கும். இங்கு தேவைப்படுவது தமிழனுடைய புதிய சமுதாயம். அதை மறுப்பதற்கு யாருக்கும் அதிகாரமில்லை. அந்த எழுச்சியைத் தடுக்க யாராலும் முடியாது.

“லங்காராணி”
நாவலில் இருந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக அமைதியை ஏற்படுத்த சோவியத் தலைவரின் புதியதிட்டங்கள்

**"மூன்றுவது உலக யுத்த எச்சரிக்கை உலகை உலுக்கிக் கொண்டிருக்கும் போது, உலகத்தின் முதலாவது சோசலிச நாடான சோவியத் ஒன்றியத்தின் கம்யூனிச கட்சியினது 26ஆவது மகாநாட்டில் சோவியத் தலைவர் லியோனித் பிரஷ்நேவ் ஆற்றியஉரை அகில உலகப் பிரச்சனைகளை அரங்கிற்குத் தருகிறது-"**

இன்று, அங்கொன்றும் இங்கொன்றுமாக வெவ்வேறு நாடுகளில் தோன்றியிருக் ம் இராணுவ மோதல்கள்,பெரும் காட்டுத்தீபோல் பரவி,பாரிய உலக யுத்தம் ஒன்றை தோற்றுவித்துவிடுமோ என்ற அச்சம் உலக மக்களை இன்று ஆட்டுகிறது. எச்சரிக்கையுடன் முன் நடவடிக்கைகள் எடுப்பதன் மூலந்தான், இத்தகைய பேராபத்துக்களைத் தவிர்த்துக் கொள்ள முடியும். இந்த நிலையில்தான் யுத்த அச்சுறுத்தலை நீக்குவதற்கும், உலகப் பாதுகாப்பை கட்டி வளர்ப்பதற்கும், மேலும் புதிய முயற்சிகள் அவசியமாகின்றது என்று சோவியத் ஒன்றிய கம்யூனிசக் கட்சியின் பொதுச் செயலாளர் லியோனித் பிரஷ்நேவ் அண்மையில் நடந்த கம்யூனிசக் கட்சியின் 26வது. மகாநாட்டில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், ஐரோப்பிய மகாநாட்டின் முடிவின்படி, தரைப்படை பயிற்சியின்போது முன்னறிவிப்பு கொடுப்பதன் மூலமும் வேறு நாட்டுப்பார்வையாளர்களை அதற்கு வரவேற்பதன் மூலமும் நடந்த நம்பிக்கை—வளர்ப்பு முயற்சியினுல் ஐரோப்பாவில் ஓரளவிற்கு சமாதானத்தை வளர்க்கும் குறிக்கோள் வேலை செய்கின்றதென்று உதாரணம் காட்டிப் பேசினுர். தரைப்படை மாத்திரமல்ல கடற்படை, ஆகாயப் படை ஆகியவற்றின் பயிற்சிகளின் போதும் இந்த முன்னறிவிப்புகள் கொடுக்கத் தயாராகவுள்ளோம். • அதுமட்டுமல்லாமல் பெரிய அளவில் படைகள் நகர்த்தப்படும்போதும் முன்னறிவிப்புகள் கொடுக்க வேண்டும் என்று பலதடவை பிரேரித்தோம். அதை இன்றும் முன்வைக்கிருேம் என்று கூறிய பிரஷ்நேவ், இந்த நடைமுறைகளுக்கான மண்டலங்கள் மேலும் விஸ்தரிக்கப்பட வேண்டும் என்ருர். சோவியத் ஒன்றியத்தின் ஐரோப்பா பகுதி முழுக்க இதை நடைமுறைப்படுத்தவும் நாம் தயாராகவுள்ளோம். ஆனுல் மேற்கத்தைய நாடுகளும் இந்த நம்பிக்கை - வளர்க்கும் திட்டங்களை நடைமுறைபடுத்த உறுதியளிக்கவேண்டும் என்று மேலும் தெரிவித்தார்.

பிரஷ்நேவ் தொடர்ந்து பேசுகையில், இந்த அளவிற்கு நம்பிக்கை—வளர்க்கும் திட்டங்களை நாம் முன்வைப்பது, இவைகளை நடைமுறைப்படுத்துவதன் முலம் ஆயுதப் பரிகரண முன்னேற்றத்தை எளிதாக்கலாம் என்ற நம்பிக்கையில்தான் என்ருர்.

பாரசீக வளைகுடாப் பிராந்தியங்களில் அமைதியை நிலைநாட்டுவது அவசியம் என்று கூறிய பிரஷ்நேவ், இந்தப் பிராந்தியங்களில் கடற்படை, ஆகாயப் படை, இராணுவப் பிரிவுகளைப் பெருக்குவதையும் ஆயுதக் குவிப்பையும் தொடர்வதற்குப் பதிலாக, இந்தப் பகுதியில் இராணுவ அச்சுறுத்தலை ஒரு சர்வதேச ஒப்பந்தத்தின் மூலம் ஒழிப்பதனுல்தான் அமைதியை நிலைநாட்ட முடியும். இந்த நாடுகளின் பூரண சுயாதீனத்தையும், கப்பற் போக்குவரத்து பாதைகளின் பாதுகாப்பையும் ஸ்திரப்படுத்த அந்த நாடுகளின்சட்டபூர்வமான விருப்பு, வெறுப்புகளைக் கணக்கில் கொண்ட ஒரு பரஸ்பர ஒப்பந்தம்தான் உறுதியளிக்கும் என்ற பிரஷ்நேவ் தொடர்ந்து பேசுகையில், சில சமயங்களில் எங்கள் பாரசீக வளைகுடா பிரதேச அமைதிக்கான பிரேரணைகளைப் பற்றி விமர்சிக்கும்போது, இது ஆப்கானிஸ்தானிலுள்ள சோவியத் ஒன்றியத்தின் இராணுவப் பிரிவின் நிமித்தம் எழும் கேள்விகளிலிருந்து பிரித்துப் பார்க்கக் கூடாது என்று சிலரால் சொல்லப்படுகின்றது.

சோவியத் ஒன்றியம் பாரசீக வளைகுடா பிரச்சனையை ஒரு தனிப்பிரச்சனையாகக் கொண்டு பேச்சுவார்த்தைகளில் ஈடுபடத் தயாராக இருக்கின்றது. அதே போல் ஆப்கானிஸ்தானைச் சூழ்ந்திருக்கும் பிரச்சனைகளுக்கு சுமூகமான முடிவு காணும் பேச்சு வார்த்தைகளுக்கும் பங்களிக்க தயாராக இருக்கின்றது. அதே வேளையில் இவ்விரு பிரச்சனைகளையும் ஒன்றினைத்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கும் ஆட்சேபனை எதுவும் தெரிவிக்காது என்று கூறினுர்.

இயல்பாக மேற்கூறியவை ஆப்கான் பிரச்சனை[illegible] தேச அம்சங்களுக்குத் தான் பொருந்துமே தவிர, அதன் உள்நாட்டு விவகாரங்களுக்குப் பொருந்தாது. ஆப்கானின் அணிசேரா அந்தஸ்து போல் அதன் பூரண சுயாதிக்கமும் முழுக்கமுழுக்க பாதுகாக்கப்பட வேண்டும் என்று பிரஷ்நேவ் மேலும் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், கேந்திர ஆயுதப் பரிகரணமும், ஆயுத உபகரண உற்பத்தியைக்கட்டுப்படுத்தலும் இன்றைய காலகட்டத்தில் ஒரு முக்கியமான பிரச்சினையாகும். சோவியத் ஒன்றியமும், ஐக்கிய அமெரிக்காவும் இதுவரை காலமும் இந்தத் துறையில் அடைந்த பெறுபேறுகளை அழிக்காமலும், ஐக்கிய அமெரிக்காவிற்கு ஒருதலைப்பட்ட சாதகமான எந்தவிதமான ஒப்பந்தங்களை அனுமதிக்காமலும், இது சம்பந்தமான பேச்சுவார்த்கைகளில் சோவியத் ஒன்றியம் ஈடுபடத் தயாராக இருக்கின்றது,

அத்துடன், அணுவாயுதங்களின் அபாயகரமான நாசவிளைவுகளைத் தடுப்பதன் அவசியத்தை விளங்கப்படுத்த ஒரு தகுதிவாய்ந்த சர்வதேசச்செயற்குழு நிர்மாணிக்கப்படவேண்டும் என்று தெரிவித்தார்.

சோவியத் ஒன்றியத்தின் வெளிநாட்டுக் கொள்கையை ஆராயும்பொழுது, சோசலிச நாடுகளுடன் ஒரு பரஸ்பர ஒத்துழைப்பையும், தோழமைமையையும் வலுப்படுத்துவதில் ஒன்றியம் முழுமையாக ஈடுபட்டுள்ளது என்று கூறினுர்.

கடந்த பத்துவருட காலத்தில் 'பரஸ்பர பொருளாதார ஒத்துழைப்புச் சபை' (CMEA) யைச் சார்ந்த நாடுகளின் பொருளாதாரவளர்ச்சி, வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளிலும் பார்க்க இரண்டு மடங்கு பெருகியுள்ளதாக பிரஷ்நேவ் சுட்டிக்காட்டினுர். ஆனுல் பிழையான, தவருன அனுமானம் பொருந்திய உள்நாட்டு கொள்கைகளும், ஏகாதிபத்தியத்தின் வெளிப்படையான சதி நடவடிக்கைகளும் இந்த நாடுகளில் சோசலிசத்திற்கு எதிரான சக்திகளைத் தூண்டிவிட்டிருக்கிறது என்று மேலும் அவர் தேரிவித்தார்.

இதுதான் போலந்தில் நடந்தது என்று கூறிய சோவியத் ஒன்றியத்தின் கம்யூனிச கட்சியின் பொதுச்செயலாளர் தொடர்ந்து பேசுகையில், சகோதரநாடாகியபோலந்தை இக்கட்டான நிலையில் கைவிடமாட்டோம். அந்நாட்டிற்கு எந்தவிதத் தீங்கும் வராமல் பாதுகாத்துக்கொள்வோம் என்று ஆணித்தரமாகத் தெரி[illegible]

சீன மக்கள் குடியரசின் வெளிநாட்டுக் கொள்கை பற்றி பிரஸ்தாபிக்கும் போது, இது சர்வதேச நிலைமையை மேலும் சீர்கெட வைப்பதைக் கருத்திற்கொண்டது என்று குப்பிட்டார். சீனுவிற்கு சோவியத் ஒன்றியத்தின் மேலுள்ள விரோதத்தைப் பயன்படுத்தி, சீனுவுடன் இராணுவ அரசியல் உறவுகளை ஏற்படுத்தி தன்னுடைய சொந்த நலன்களைத் தொடர ஏகாதிபத்தியம் முயற்சிக்கிறது. இது ஒரு அபாயகரமான சூதாட்டமே. ஏகாதிபத்தியம் சோசலிசத்தின் சிநேகிதர்களாக ஒரு போதும் மாறமாட்டார்கள் என்று கூறிய பிரஷ்நேவ், "சோவியத்-சீனஉறவுகள் இன்றும் உறைந்திருப்பதாலுல் எங்கள் நிலைமை அதற்குக் காரணமல்ல" என்று கூறினுர்.

சோவியத்-சீன உறவுகளைச் சகஜநிலைப்படுத்தும் எம் பிரேரணைகள் இன்றும் திறந்தே இருக்கின்றது. சீன மக்களின் பால் நமக்குள்ள தோழமை உணர்வும், மரியாதையும் ஒரு போதும் அழியாது என்று மேலும் தெரிவித்தார்.

சோவியத் ஒன்றியத்திற்கும், விடுதலை அடைந்த நாடுகளுக்குமிடையே உள்ள ஒத்துழைப்பு அதிகமாக வளர்ந்திருக்கின்றது என்றுகூறிய பிரஷ்நேவ்,ஆப்கான் புரட்சிக்கு எதிராக அறிவிப்பு எதுவும் இன்றி நடைபெறும் போராட்டத்திற்கு, முடிவு காண்பதற்குச் சாதகமான கருத்துக்களைத் தெரிவித்தார்.

மற்றும், சகோதர நாடுகளுடன் சோவியத் ஒன்றியம் சேர்ந்து விடுதலை அடைந்த நாடுகளுக்கு அவர்கள் அழைப்பின் பேரில் பொருளாதார, விஞ்ஞான, தொழில்துறை ஒத்துழைப்பை அளிப்பதோடு, அவர்களின் பாதுகாப்பு திறமையையும் உயர்த்த உதவியளிக்கின்றது என்று குறிப்பிட்ட அவர், சோவியத் ஒன்றியம், "புரட்சி ஏற்றுமதியை எதிர்க்கும் அதேவேளையில், புரட்சிக் கெதிரான போராட்டத்தை ஏற்றுமதி செய்வதையும் ஒத்துக்கொள்ள மாட்டாது" என்ருர்.

ஆப்கான் புரட்சிக் கெதிராக ஏகாதிபத்தியம் அறிவிப்பு எதுவுமின்றி கட்டவிழ்த்து விட்ட போராட்டத்திற்கு, முடிவு காணும் சாதகமான கருத்துக்களை சோவியத் ஒன்றியத்தின் கம்யூனிச கட்சிப் பொதுச்செயலாளர் லியோனித் பிரஷ்நேவ் முன்வைத்து பேசியபோது,

ஆப்கான் அரசின் இணக்கதுடன் ஒரு வரம்பிற்குட்பட்ட இராணுவப்பிரிவை சோவியத் ஒன்றியம் வெளியேற்றத் தயார். ஆனுல் ஆப்கான் உள்நாட்டு விவகாரங்களில் புதிய தலையீட்டு நடவடிக்கைகள் தொடரமாட்டாது என்று நம் பத்தக்க உத்தரவாதம் அளிக்க வேண்டும் என்று கூறினுர்.

ஈரான்-ஈராக் சண்டையைப் பற்றி குறிப்பிடுகையில், இது முற்றிலும் அர்த்தமற்றது. ஆனுல் ஏகாதிபத்தியத்திற்கு இலாபமானது என்ருர். எந்தச் சண்டையை முடிவடையச் செய்யவும், அரசியல் தீர்வு காணவும் சோவியத் ஒன்றியம் அயராது உழைக் ம் என்று மேலும் தெரிவித்தார்.

மத்தியகிழக்கு நாட்டு விவகாரங்களைப் பற்றிப் பேசும் போது, கூட்டான முறையில் விரிவான தீர்வு காண, தெளிவான அடிப்படையில் முயற்சிக்கவேண்டும். இது ஒரு விசேச சர்வதேச மாநாட்டு அமைப்பால் தான் முடியும் என்ருர். இதற்கு முடிவுகாண சோவியத் ஒன்றியம் சம்பந்தப்பட்ட நாடுகளுடன் (பாலஸ்தீனம் - இஸ்ரவேல் போன்ற) வேலைசெய்யத் தயார் என்று மேலும் தெரிவித்தார்.

பிரஷ்நேவ் தனது அறிக்கையில், கம்யூனிச இயக்கம் தொடர்ச்சியாக வளர்ந்து வலிமை அடைந்து வருகின்றது. இன்று 94 நாடுகளில் கம்யூனிஸ்ட்டுகள் தீவிரமாக வேலை செய்கின்ருர்கள் என்று அழுத்திச் சொன்னுர்.

கம்யூனிஸ்ட் கட்சிகளின் வளர்ச்சி அவர்களின் செல்வாக்கை உறுதிப்படுத்தும் அதே வேளையில் அவர்களை எதிர்நோக்கியிருக்கும் வேலைகள் சிக்கலானதாகவும், வேறுபட்ட கருத்துடையனவாகவும் இருக்கின்றது. இதனுல் ஒரு குறிப்பிட்ட பிரச்சனை ஒன்றை மதிப்பிடுவதிலும், அதன் தீர்வுக்கான அணுகுமுறையிலும் சிலசமயங்களில் வேறுபாடு தோன்றுவதோடல்லாமல், கட்சிகளினிடையே விவாதங்களை உருவாக்குகிறது என்று கூறிய பிரஷ்நேவ் தொடர்ந்து பேசுகையில் எவ்வளவுதான் வேறுபாடுகள் இருந்தபோதிலும், பொதுவர்க்க விரோதிக்கெதிரான போராட்டத்தில் அரசியல் ஒத்துழைப்பு அவசியமானதும், சாத்தியமானதும் என்பதை வரலாறு சித்தரிக்கின்றது என்ருர்.

சோவியத் ஒன்றியம் அநேகமான கம்யூனிஸ்ட் கட்சிகளுடன் நல்ல உறவுகளை நிலைநாட்டியுள்ளது என்று கூறிய பிரஷ்நேவ் தொடர்ந்து பேசுகையில், ஜனநாயக சக்திகளுடன் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதன் மூலமும், வேறுநாட்டின் சோசலிச,சமூக ஜனநாயக கட்சிகளுடன் சேர்ந்து யுத்த அச்சுறுத்தலுக்கெதிரான போராட்டத்தை வலுப்படுத்தியதன்மூலமும், சமாதானத்தை உறுதிப்படுத்துவதற்கும், மக்களின் முக்கிய நலன்களைக் காப்பாற்றவும், உலக விவகாரங்களின் நிலைமையை அபிவிருத்தி செய்யவும் இனவாதத்தையும், பாசிசத்தையும் தடுக்கவும் சோவியத் ஒன்றியம் ஒரு

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழவர் இடர் தீர...

''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற பரந்த நோக்கிற்கும், ''உலகத் தொழிலாளர்களே! ஒன்றுபடுங்கள்'' என்ற தத்துவ வித்தகனின் நோக்குக்கும் இடையிலான தர்க்கீக வேறுபாட்டைக் காணலாம். முன்னது பூர்ஷுவா சிந்தனையின் அடிப்படையிலானது. பின்னது வர்க்க ரீதியிலானது. இருந்தும் முன்னதில் மற்றுமொரு தர்க்கீக உண்மையை ஊகிக்கலாம்.

அதாவது ''யாதும் ஊரே யாவரும். கேளிர்'' என்ற தமிழ்ப் புலவன் ''நன்றும் தீதும் பிறர்தர வாரா'' எனச் சொல்லிவைக்க மறக்கவில்லை. அதாவது ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் ஈழப்பிரகடனத்தை உலகிற்குப் பறைசாற்றுகிற அதே வேளை ஈழத் தமிழரின் — அதாவது ஈழவரின் எதிர்காலமும், அவர்கள் தம் விமோசனமும் ஈழவர் அல்லாதோர் கையிலில்லை. அவர்கள் தம் தன்நம்பிக்கையிலும், போராட்ட விதத்திலும்தான் தங்கியுள்ளதே அன்றி பிறர் கையில் இல்லை என்பதை யாவரும் ஒப்புக் கொள்வர். இதுபற்றி ஈழத்தமிழர்களின் இன்றைய முன்னோடிகளான ஜனநாயக அரசியல் தலைவர்களுக்கும், ஏனைய தமிழர் தம் அரசியல் சிந்தனை ஈடுபாட்டினருக்கும், தர்க்கீக வாதிகளுக்கும், மக்களுக்கும் எந்தவொரு மாறுபட்ட கருத்தும் இருக்க முடியாது. ஆனால் ஈழத்திற்கான மக்கள் சகாப்தத்தை, ஒரு புதிய சகாப்தத்தை உருவாக்க அணுகும் முறையில்தான் மாறுபாடு இருக்கக் கூடும். இது இயங்கியல் உண்மை. இந்த உண்மையை இயங்கியல் வரலாற்றில் படிக்கக் கூடியதாய் உள்ளது. இல்லாவிட்டால், உலகத்தொழிலாளர்களின் நலன் பாட்டிற்கு உழைத்த தத்துவவித்தகனின் தத்துவத்தை, நிதர்சனமாக உலகத்தொழிலாளர்களுக்கு, ''ருஷ்யப் புரட்சி'' மூலம் புரவலன் நிரூபித்துக் காட்டியிருப்பானா? ''உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்'' என்று 1848 ஆம் ஆண்டிலேயே கார்ல்மார்க்ஸ் குரல் கொடுத்த போதிலும், 1905-1917-ம் ஆண்டுக் காலகட்டத்தில்தான் ஒரு தொழிலாளர் புரட்சி மூலம் முதலாவது சோசலிச சோவியத்தை உருவாக்க முடிந்தது. இதன் பரிமாணங்களை உலகத் தொழிலாளர்களின் உன்னத நாளான மே நாளில் பார்க்க வேண்டியது ஈழவர்களினுடைய கடமை. மேதினத்தின் வரலாற்று உண்மையை தர்க்கீகத்தின் மற்றுமொரு பக்கத்தில் படிக்கலாம். ஆனால் இங்கு இயங்கியல் ரீதியில் அடிப்படைத் தத்துவ உண்மையை ஆயவேண்டும்.

சகல வர்க்கத்து மக்களையும், சகல மட்டத்து தொழிலாளர்களையும் கொண்ட பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரம் (Dictatorship of the Prolitareat) பற்றிய, தத்துவத்தைத் தந்த மார்க்சினுடைய வாழ்நாள் காலத்தில், ஒரு வெற்றிகரமான தொழிலாளர் புரட்சி ஏற்படவில்லை. அவ்வப்போது ஜெர்மனியிலும் பிரான்சிலும் ஏற்பட்ட புரட்சிகளின் தோல்வி காரணமாக அதற்கான காரணங்களையும், அக்காரணங்களுக்கு அடிப்படை 'முதலாளித்துவம்' என்பதனுல், அக்காலகட்டத்தில் முதிர்ந்த முதலாளித்துவ நாடாகவிருந்த பிரித்தானியாவில் ஆய்வு நடத்திக் கொண்டும், ஆக்கபூர்வமான அரசியல் வேலைப்பாடுகளையும் கவனித்துக் கொண்டிருந்தார் மார்க்ஸ். இங்கிருந்துதான் 'கம்யூனிசத் திட்டத்தை' வெளியிட்டார். பின் 'டாஸ் கப்பிற்றல்' எழுதிமுடித்தார். இன்னும் இன்னோரன்ன ஆய்வுகளை (இருபதுவரை) எழுதி முடித்தார். அத்தோடு 'கம்யூனிச அகிலம்' என்ற இயக்கத்தையும் வலுவடையச் செய்தார். இந்தக் காலகட்டத்தில், இவர் கருத்தின்படி,

**''முதிர்ந்த முதலாளித்துவ நாடுகளில், முக்கியமாக பெரிய பிரித்தானியாவில் பொருளாதாரக் கஷ்டங்கள் கூர்மையடையும்போது 'தொழிலாளர் சர்வாதிகாரம்' ஏற்படுவதன் மூலம் சோசலிசம் மலரும் என்பதே.இதன் எதிரொலியாக உலகநாடு களிலும் சோசலிச மயமான பொருளாதார அமைப்பு ஏற்படும் என்ற ஊகமே மார்க்சின் கருத்து.**

ஆனால் இந்தக் கருத்து புரட்சி மயமாக்கப்பட்டு தொழிலாளர் புரட்சி ஏற்படாத அளவுக்கு அந்தக் காலகட்டத்தில் 'பூர்சுவா ஜனநாயகம்' தலையெடுத்திருந்தது. பெரிய பிரித்தானியாவின் தொழிலாளர்களையோ, பிரான்சின் தொழிலாளர்களையோ,ஜேர்மனியின் தொழிலாளர்களையோ புரட்சிப் பாங்கில் ஈடுபடாத அளவுக்கும் அவர்கள் ஏனைய உலகத் தொழிலாளர்களின் நலத்தில் அக்கறை கொள்ளாத அள...
கும், அவர்களுக்கு உகந்த வேதனத்தைக் கொடு...
முடிந்தது. இந்நாடுகள் கையாண்டுவந்த உலகச் சுர...
டலின் மூலம் அவ்வப்போது ஏற்பட்ட வேதன உ...
வுப் போராட்டங்கள், மற்றும் உரிமை குறித்...
போராட்டங்களில் தொழிலாளர்கள் இரத்தம் சி...
உரிமைகளும், பொறுப்புக்களும் பூர்சுவாக்களின் ...
யில் சேர்ந்தது. இவைகள் அனைத்தும் வெறும் தொழி...
சங்க ரீதியிலான போராட்டங்களாகவே இறுதி...
முடிந்தது. இதன் தாக்கங்களை இதர நாடுகளிலு...
காணக்கூடியதாகவிருந்தது. இலங்கையில் கூட சு...
திரத்திற்கு முன்னும் பின்னும் நடந்த தொழிலா...
போராட்டம் வெறும் உரிமைப் போராட்டமாக...
முடிந்தது. உடைமைப்பாட்டுப் போராட்டத்துக்கா...
தொழிலாளர் புரட்சியாக ஏற்படவில்லை. இல்லாவி...
டால் இலங்கையின் பாட்டாளி வர்க்கத்தின் மு...
கெலும்பான தோட்டத் தொழிலாளர்களின் உரி...
கள் பறிபோயிருக்குமா? இல்லை அவர்கள் உரிமை...
கான இயக்கமான இலங்கைத் தொழிலாளர் காங்...
சின் தலைவராகத் திரு.தொண்டமான் இருப்பார...

இருந்தும் மார்க்சினுடைய அடிப்படைத் தத்...
வம், அதாவது ''தொழிலாளர்களுடைய சர்வாதி...
ரம்' தளரவில்லை. இதை நினைப்பூட்டுவது மட்டு...
லாமல் நிரூபித்துக் காட்டியது, 'போல்சிவிக் போரா...
டமும் சோவியத் ஒன்றியமும்', 'போல்சிவிக்'போரா...
டத்தின் மூலம் புரவலன் லெனின் மார்க்சிய சித்த...
தத்துக்கு முழுமையான வடிவம் கொடுத்தான். அ...
வது மார்க்சிய தத்துவத்தை அனுட்டிப்பதன் மூ...
ருசிய சூழ்நிலையில் ஏற்பட்ட பிரச்சினைகளுக்கும் தீ...
கண்டதுடன் அவைகளைப் பாடமாகவுந் தந்துள்ளா...

உதாரணத்துக்கு, தொழிற்சங்க ரீதியானமு...
யில் தொழிலாளர்களுடைய வெறும் பொரு...

# கூட்டுச் சேரா நாடுகளும் அண்மை மாநாடும்

இன்று உலகில் தோன்றியிருக்கும் பிரளயமான பொருளாதார, அரசியல் நெருக்கடியின் மத்தியில், வீழ்ச்சியடைந்துவரும் ஏகாதிபத்திய வல்லரசுகள் தமது ஆதிக்கத்தையும், இழந்துவரும் போலிக் கௌரவத்தையும் மீண்டும் நிலைநாட்ட முனைந்து நிற்கும் இன்றைய காலகட்டத்தில், தமது உறுதிப்பாட்டையும், ஸ்திரத் தன்மையையும் மீளாய்வு செய்து இன்று சூழ்ந்திருக்கும் நெருக்கடிகளுக்கு சுமூகமானமுறையில் தீர்வு காணவேண்டும் என்ற அணிசேரா நாடுகளின் எண்ண அபிலாசைகளின் அடிப்படையில் அண்மையில் அணிசேரா நாடுகளின் பிரதிநிதிகள் மாநாடு புதுடில்லியில் நடைபெற்றது.

இவ் அணிசேரா இயக்கத்தில் அங்கத்துவம் வகிக்கும் நாடுகள் எந்தவொரு வளர்ச்சியடைந்த வல்லரசு நாடுகளுடனும் அணிசேரா நிலையில் இருக்கவேண்டும் என்பதே இயக்கத்தின் அடிப்படைக் கோட்பாடாக இருக்கின்றது. அதாவது இந்த நாடுகள் தமது மக்களின் சுதந்திரத்தையும், சுயாதிபத்திய இறைமையையும் பேணிக்காப்பதோடு தமது பொருளாதார மேம்பாட்டுக்கும், வளர்ச்சிக்கும் சுரண்டும் வல்லரசுகளிடமிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதுமான அடிப்படை நெறிசார்ந்துதான் இவ்வியக்கம் கட்டி எழுப்பப்பட்டது.

இருபது வருடங்களுக்கு முன்பு இவ் வியக்கத்தைத் தோற்றுவித்த மறைந்த தலைவர்களான அப்துல் நாசார், மார்ஷல் டிட்டோ, நேரு போன்றவர்கள் அன்றைய காலகட்டத்தின் அவசியத்தையும், தேவையையும் கருத்திற்கொண்டே வளர்ச்சியடையாத நாடுகள் தமது முன்னேற்றத்திற்கும் பாதுகாப்பிற்கும் ஒரு வலுவான அமைப்பு அவசியம் என்ற அடிப்படையான எண்ணத்தினுலேயே இவ் இயக்கத்தை தோற்றுவித்தார்கள். இவ் இயக்கத்தை ஆரம்பித்த மூலவர்கள், ஏகாதிபத்தியத்தின் அடக்குமுறைகளுக்கும், காட்டுமிராண்டித் தனத்திற்கும் எதிராகக் குரல் கொடுத்துவந்ததோடு எதிரான அரசியல் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுவந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வியக்கம் ஆரம்பிக்கப்பட்டபொழுது இவ்வியக்கத்திற்குஎதிராக ஏகாதிபத்தியங்கள் செயற்பட்டனவாயினும், சூழ்ச்சி எண்ணப்பாங்கின் நிமித்தம் பின்னர் ஏற்றுக் கொள்ள முன்வந்தது. அதன் அச் சூழ்ச்சி நடவடிக்கையின் பிரதிபலிப்புகளை அண்மை மாநாட்டில் காணக்கூடியதாக இருந்தது.


## " யதார்த்தத்தின் முன் சதிகள் பலமிழந்தவையே "

எல்வளவுதான் ஏகாதிபத்தியங்கள் முயற்சித்தும், அணிசேரா நாடுகளின் சுதந்திரத் தன்மையையும், அமைதியை நிலைநாட்ட விரும்பும் அவர்கள் குறிக்கோளும் இம் மாநாட்டின்மூலம் வெளியானது. மிகவும் பரவலாகப் பேசிக்கொள்ளப்படும் ஆப்கானிஸ்தான், கம்பூச்சியா விவகாரங்களைப் பொறுத்தமட்டில் மேற்கத்தைய பத்திரிகாதர்மம் முதலாளித்துவ ஏகாதிபத்திய நலன்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அணிசேரா நாடுகளின் ''நடுநிலைவாதிகளுக்கு'' முழுக்க வெற்றியே எனப் பறைசாற்றினுலும்கூட உண்மையில் அணிசேரா நாடுகளின் கொள்கைகள் முழுக்க முழுக்கப் பேணப்பட்டிருப்பதை மாநாட்டின் முடிவில் வெளிவந்த அறிக்கையில் காணலாம்.

இம்மாநாட்டில் கலந்துகொண்ட சிங்கப்பூர் பிரதிநிதி தனபாலன், கியூபாவையும் இந்தியாவையும் கடுமையாகச் சாடி ஏகாதிபத்தியங்களுக்கு வக்காலத்து வாங்க முன்னின்றதைத் தெளிவாக உணரக் கூடியதாக இருந்தது. ஆப்கானிஸ்தான், கம்பூச்சியாப் பிரச்னைகளை முன்வைத்து சோவியத் ஒன்றியத்தை மறைமுகமாக சாடுவதன்மூலம் அணிசேராக் கொள்கையின் தார்ப்பரியத்தைத் தகர்க்க முற்பட்ட ஏதாதிபத்திய சூழ்ச்சிகளை அம்மாநாட்டில் அப்பட்டமாகக் காணக்கூடியதாக இருந்தது.

கம்பூச்சியாவில் பொல்பொட் ஆட்சி நடத்திய பயங்கரப் படுகொலைகளையும், இரத்தக்களரிகளையும் முடிவுக்குக் கொண்டுவந்து அம்மக்களின் பூரண சுதந்திரத்திற்கும் அடிப்படை உரிமைகளுக்கும், சமூக பொருளாதார முன்னேற்றத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கறை கொள்ளாத அள்வுக்
வேதனத்தைக் கொடுக்க
பாண்டுவந்த உலகச் சுரண்
ஏற்பட்ட வேதன உயர்
மற்றும் உரிமை குறித்த
லாளர்கள் இரத்தம் சிந்த
ளும் பூர்சுவாக்களின் கை
னைத்தும் வெறும் தொழிற்
டங்களாகவே இறுதியில்
ங்களை இதர நாடுகளிலும்
இலங்கையில் கூட சுதந்
லும் நடந்த தொழிலாளர்
மைப் போராட்டமாகவே
டுப் போராட்டத்துக்கான
ஏற்படவில்லை. இல்லாவிட்
டாளி வர்க்கத்தின் முது
தொழிலாளர்களின் உரிமை
இல்லை அவர்கள் உரிமைக்
கத் தொழிலாளர் காங்கிர
தாண்டமான் இருப்பாரா?

டைய அடிப்படைத் தத்து
ளர்களுடைய சர்வாதிகா
நினைப்பூட்டுவது மட்டுமல்
து, 'போல்சிவிக் போராட்
ம்', 'போல்சிவிக்'போராட்
லெனின் மார்க்சிய சித்தாந்
டிவம் கொடுத்தான். அதா
தை அனுட்டிப்பதன் மூலம்
பிரச்சினைகளுக்கும் தீர்வு
பாடமாகவுந் தந்துள்ளான்
தாழிற்சங்க ரீதியானமுறை
டய வெறும் பொருளா

தார போராட்டம் ( Economic Struggle ) மூலம் ஜாரின் ஆட்சியை வீழ்த்தி, ஆட்சியைக் கைப்பற்றி, சீர்திருத்தமயமான (Reform) முறையில், ருசியா-வை முன்னெடுத்துச் செல்லலாம் என்று கூச்சலிட்ட ஒருதரப்பட்ட ருசிய சமூக ஜனநாயக வாதிகளை முதலில் சாடுகிருன். இந்தப் 'பொருளாதார வாதத்துக்கு' எதிரான போராட்டமே லெனினின் ஆரம்பப்போராட்டம். இந்தச் சாடல் ( Criticism ) அல்லது போராட்டத்தின் ( Struggle ) மூலம் ஒரு உண்மையை உணர்த்தி வைக்கிருன். அதாவது வெறும் உரிமைகளுக்கு, அதுவும் தனித்தனியே தொழிலாளர்களுக்குக் கூடிய வேதனமும், உகந்த வேலைச் சூழ்நிலைகள் என்றும், பாமரருக்கு பலதரப்பட்ட சலுகைகள் என்றும், குரல் எழுப்புபவர்கள் வெறும் கூக்குரலையும் பரபரப்பையுமே ஏற்படுத்துகிருர்கள். இந்தப் பரபரப்பால் மக்கள் மத்தியில் எந்தவித அடித்தள உணர்வும் ஏற்படுவதில்லை என்பதை ஆணித்தரமாக எடுத்துக் காட்டினுன். இதனுலேயே நாமும், தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தமட்டில், அது தோட்டத் தொழிலாளர்களாயினும் சரி, பாமர மக்களாயினும் சரி, இல்லை மாணவர்களாயினும் சரி, நடுத்தர வர்க்கத்து உத்தியோகத்தர்களாயினும் சரி இவர்களது தனித்தனிப்பட்ட ரீதியான வெறும் உரிமைகளைப் பிரதிபலித்துக் கூக்குரல் எழுப்பாது, ஈழவர்களின் ஏகோபித்த ஒட்டுமொத்தமான உடமைப்பாட்டு ரீதியில் குரல் எழுப்புவதோடு, அது மக்கள் மத்தியில் பரபரப்பை மட்டுமன்றி ஆழ்ந்த உணர்வையும் அதனடிப்படையிலான எழுச்சியையும் ஏற்படுத்த வேண்டுமென வற்புறுத்தி வருகிருேம். இதுவே ஈழப் போராட்டமாக அமையும்.

இந்த ஈழப்போராட்டத்தின் முக்கிய அணியாக நம்மினத்தின் முதுகெலும்பான தொழிலாளர் வர்க்கத்தைத் தலைமைதாங்க ஏற்பாடு செய்வோமாக.

# விடுதலை இயக்கங்களுக்கு எதிராக

# அமெரிக்க பயங்கரவாதம்

முதலாளித்துவ பொருளாதார நெருக்கடியினுலும், முதலாளித்துவ இன, மத, நிற பேத வெறியாட்டங்களினுலும் சிக்கித் தவித்துக்கொண்டிருக்கும் மக்கள் தமது பூரண சுதந்திரத்தையும், சமூக பொருளாதார விமோசனத்தையும் வேண்டி போராட முற்படும் போது இம்முதலாளித்துவ ஏகாதிபத்தியங்கள் அம்மக்களைப் பயங்கரவாதிகள் எனப் பறைசாற்றி அவர்களை முற்ருக அடக்கி ஒடுக்க கங்கணம்கட்டி நிற்கின்றது.

வறிய உலகநாடுகள் பூராவும் தமது சுரண்டல் ஆதிக்கங்களை நடாத்திவரும் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் போன்ற ஏகாதிபத்திய வல்லரசுகள் தமது சுரண்டல் நடவடிக்கைகளை காப்பாற்றிக் கொள்ள, மக்களின் விடுதலை வேண்டிப் புறப்படும் விடுதலை இயக்கங்களை பயங்கரவாதிகள் எனச் சாடி அவற்றுக்கெதிரான பயங்கரவாத நடவடிக்கைகளில் தீவிரமாக இறங்கியுள்ளன,

அண்மையில் சிரியாவின் தலைநகரான டமாஸ்கஸ்சில் நடைபெற்ற பாலஸ்தீன தேசிய மன்ற மாநாட்டின் இறுதி அறிக்கையில், தமது மக்களின் பூரண விடுதலை விமோசனத்திற்காக போராட முற்படும் விடுதலை இயக்கங்களுக்கு எதிரான பயங்கரவாத நடவடிக்கைகளில் அமெரிக்கா போன்ற ஏகாதிபத்திய வல்லரசுகள் தீவிரமாக இறங்கியுள்ளன என குற்றஞ் சாட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பாலஸ்தீன மக்களின் பூரண சுதந்திரத்தையும், தேசிய அந்தஸ்து இறைமையையும் உதாசீனம் செய்து அம்மக்களை நாடற்ற அனுதைகளாக்கி அழித்தொழிக்கும் நடவடிக்கைகளில் முனைந்துநிற்கும் இஸ்ரேலிய முதலாளித்துவ கும்பலுக்கு(சியோனிஸ்ட்)துணையாக பொருளாதார, ஆயுத உதவிகளை அமெரிக்கா செய்துவருவதோடு, அண்மையில் அமெரிக்க ஜனுதிபதி றீகன் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை பயங்கரவாத இயக்கம் என பகிரங்கமாக சாடுவதோடு அவற்றுக்கெதிரான நடவடிக்கைகளில் அமெரிக்கா தொடர்ந்தும் ஈடுபடும் என்றும் தெரிவித்தார்.

இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் எல்-சல்வடோர் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான தாக்குதலில் ஈடுபட்டிருக்கும் எல்-சல்வடோர் இராணுவ சர்வாதிகார அரசுக்கு ஆயுத, பொருளாதார உதவிகளை அமெரிக்கா செய்து வருகின்றது. இத்தகைய அமெரிக்கா, தனது ஆக்கிரமிப்பு சுரண்டல் நடவடிக்கைகளுக்கு எதிராக குரல் கொடுக்கும் விடுதலையடைந்த நாடுகளையும், விடுதலை வேண்டி போராடும் விடுதலை இயக்கங்களையும் பயங்கரவாதிகள் எனச் சாடி, பயங்கரவாதச் சதிகள் மூலம் தமது கைங்கரியங்களை நிலைநாட்ட முற்படுவதை கடந்தகால வரலாறுகளையும் நிகழ்கால நிகழ்வுகளையும் கொண்டு தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

தென் ஆபிரிக்காவில் நிறவெறி ஆட்சி நடாத்திவரும் கொடுங்கோலர்களை தமது நண்பர்கள், துணைவர்கள் என்று கூறிக்கொள்வதுடன் சகல இராணுவ பொருளாதார உதவிகளைச் செய்து வருவதும், நமீபிய மக்களின் விடுதலை இறைமையை ஆதரித்த அணிசேரா இயக்கத்தைக் கண்டிப்பதும், மத்திய கிழக்கிலும், பாரசீக வளைகுடாவிலும் இந்துசமுத்திர பிராந்தியங்களிலும் இராணுவபிரிவுகளை நிலைநிறுத்திக்கொள்வதும், போலந்தில் ஸ்திர நிலையை தளர்த்தும் நடவடிக்கையில் ஈடுபடுவதும், விடுதலையடைந்த நிக்கரகுவாவிற்கு சகல பொருளாதார உதவிகளை நிறுத்துவதும், டியாகோகார்சியாவில் நிலைநிறுத்தப்பட்ட ராணுவப் பிரிவுகளை விஸ்தரிப்பதன் மூலம் ஆசியாவையே ஆதிக்கம் செலுத்த எடுக்கும் நடவடிக்கைகளும், பாகிஸ்தான், எகிப்து, சோமாலியா, கென்யா போன்ற நாடுகளில் இராணுவத் தளங்களை உருவாக்கி வருவதும் போன்ற ஈனச் செயல்களில் ஈடுபட்டு வருகின்றது அமெரிக்க ஏகாதிபத்தியம்.

மற்ருெரு புறத்தில், வெவ்வேறு நாடுகளில் உருவாகும் ஆயுதப் போராட்டங்களும், ஏகாதிபத்தியத்தின் சூழ்ச்சியினுல் நடைபெறும், ஆட்சிக் கவிழ்ப்புக்களும் மூன்ருவது உலக யுத்தம் ஒன்றைத் தோற்றுவித்து விடுமோ என்று உலகமக்களை இன்று அச்சம் கொள்ள வைக்கிறது. இன்றைய இந்நிலை ஒரு அணுஆயுதப் பலப் பரீட்சைக்கு வித்திட்டு உலகமக்களின் பொருள்-ஆன்மீகச் செல்வங்களைச் சூறையாடி சூனியமான எதிர்கால மான்றை உருவாக்கிவிடுமோ என்ற பீதியும் இன்று நிலவுகின்றது.

இதற்கெல்லாம் எண்ணை ஊற்றுவதுபோல் அமெரிக்க கிழட்டு ஏகாதிபத்தியத்தின் இன்றைய நிர்வாகிகளின் வறட்டுத் தத்துவங்களும், செயற்பாட்டு முறைகளும் அமைந்திருக்கின்றது. சமாதானம் விரும்பும் உலக நாடுகளிடையே தாம் இழந்த "செல்வாக்கை" மீண்டும் நிலைநாட்டிக் கொள்வதற்கான முயற்சியில் அமெரிக்க ஏகாதிபத்தியம் இன்று ஒரு பயங்கரவாதத்தையே கட்டவிழ்த்து விட்டிருக்கின்றது,

ஏகாதிபத்தியத்தின் முறட்டுத்தனமான இரும்புப் பிடியிலிருந்து தம்மை விடுவித்த வியட்னும், அங்கோலா, மொசாம்பிக், சிம்பாவே, ஆப்கானிஸ்தான், நிக்கிரகுவா போன்ற நாடுகள் தமக்கென ஒரு சமத்துவ சமதர்ம சமுதாயத்தை உருவாக்க முன்னேறுவதன்மூலம் ஏகாதிபத்தியத்தின் உலக பொருளாதார ரீதியில் அமைந்த அப்பட்டமான சுரண்டல் தன்மையையும், அதன் பாரபட்சமான கொள்கைகளையும், புட்டுக்காட்டி, சோசலிச அமைப்பின் மகிமையை எடுத்துக் காட்டுவது ஏகாதிபத்தியத்தை பீதியில் ஆழ்த்துகினறது.

முதலாளித்துவத்தில் தவிர்க்க முடியாமல் ஏற்படும் பொருளதார ஸ்தம்பிதமும், அதன் விளைகளான வேலையில்லாத் திண்டாட்டம், பணவீக்கம், அரசியல் ஸ்திரமற்ற நிலை என்பன அவர்களைப் பீதியில் ஆழ்த்துகின்றது.

இவைகளுக்கெல்லாம் காரணம் கம்யூனிசம்தான் என்ற வறட்டுத் தத்துவத்தை அடிப்படையாகக்கொண்டு விடுதலை வேண்டி நிற்கும் மக்களை "உலகப் பயங்கரவாதிகள்" எனச் சாடி, சோவியத் ஒன்றியம் தான் இதற்கெல்லாம் காரணம் என்று கூறி சோசலிச நாடுகளைப் பிய்த்தெறிந்துவிட கங்கணம்கட்டி நிற்கும் அமெரிக்க ஐரோப்பிய, ஆசிய ஏகாதிபத்தியங்கள் ஆயுதக் குவிப்பிலும் அர்த்தமற்ற போர்முரசு கொட்டுவதிலும் ஈடுபட்டிருக்கின்றது.

அமெரிக்க ஏகாதிபத்தியம் வியட்னுமில் நடாத்திய காட்டுமிராண்டிச் செயலையும், சி.ஐ.ஏ. உளவு ஸ்தாபனம் மூலம் சிலி மற்றும் பிறநாடுகளில் நடாத்திய பயங்கர இரத்தக் களரிகளையும் மறைத்து ஜனநாயகம் சுதந்திரம் என்றெல்லாம் பல்லவி பாடித் தனது பயங்கரவாத நடவடிக்கைகளை மறைமுகமாகவும் சில நாடுகளில் நேரடியாகவும் நடாத்தி வருகின்றது. இத்தனைக்கும் அனேக பாடங்களைப் படித்துக் கொண்ட ஏகாதிபத்தியங்கள் தமது வீழ்ச்சியை மீண்டும் நிலைநாட்ட எத்தனித்து வருகின்றது. இவை நிதர்சனமானவையா? என்ற வினு எழுப்பும்போது, நாளுக்குநாள் வலுவடைந்து வரும் சோசலிச நிர்மாண கட்டமைப்புக்கள் இம் முதலாளித்துவ ஏகாதிபத்திய முகமூடிகளை கிழித்தெறிந்து உலக மக்களின் பூரணசுதந்திரத்தையும் இறைமைகளையும் காப்பதோடு அம்மக்களின் சமூகபொருளாதார முன்னேற்றத்திற்கும் வழிவகுக்கும் என்பது திண்ணம். இது இயங்கியல் நியதியும் கூட.

முடிவில்
யில் காண

கலந்து
பிரதிநிதி
பாவையும்
மையாகச்
ங்களுக்கு
முன்னின்
உணரச்
. ஆப்கா
யாப் பிரச்
து சோவி
மறைமுக
ம் அணி
ன் தார்ப்
முற்பட்ட
சிகளை அம்
ட்டமாகக்
இருந்தது.

பொல்
த்திய பயங்
யும், இரத்
முடிவுக்குக்
ம்மக்களின்
கும் அடிப்
கும், சமூக
ன்னேற்றத்

துக்கும் வழிகோல எடுத்த முயற்சிகளை முறியடிக்க முனைந்துநிற்கும் முதலாளித்துவ ஏகாதிபத்தியங்கள் தமது சகபாடிகளைப் பயன்படுத்தி தமது சுரண்டல் ஆதிக்கங்களை நிலைநாட்ட முயற்சி எடுக்கின்றன. இதுபோலவே ஆப்கானிஸ்தானிலும் அம்மக்களின் பூரண விருப்புக்களுக்கு மாருக ஆப்கான் மக்கள் ஆட்ச்சியைக் கவிழ்க்கச் சதி வேலைகளில் அமெரிக்க மற்றும் ஏகாதிபத்தியங்கள் ஈடுபட்டுவருகின்றது.

இந்நிலையில் அணிசேராக் கொள்கையைப் பின்பற்றிக் கொண்டு, அக் கொள்கையை குழிதோண்டிப் புதைக்கும் ஏகாதிபத்தியங்களின் சூழ்ச்சிகளுக்கு இரையாகிவரும் சிங்கப்பூர், பகிஸ்தான், ஸ்ரீலங்கா போன்ற நாடுகள் உலக சமாதானத்தையும், அமைதியையும் உதாசீனம் செய்து ஏகாதிபத்திய ஆதிக்க வெறியர்களுக்கு முண்டு கொடுக்கவும் முனைந்துநிற்கின்றனர் இதனுல்தான் அணிசேரா என்ற பதம் அர்த்தமானதா என்று கேட்கத் தோன்றுகின்றது.

முதுபெரும் அரசியல் விமர்சகரான சல்பத்திராவ் கூறியது போல், அதிகமான நாடுகள் பழையகாலணிநாடுகளாகவும் நவீன காலணித்துவத்திற்கு எதிரான நாடுகளாகவும் இருப்பதனுல் ஆயுதபலம், பொருளாதாரபலம் அற்ற நிலையில் ஆயுதப்பரிகரணத்திற்கு அடிகோல முனைகின்றன என்றும் அந்நாடுகள் வளர்சியடையாதனவாக உலக பொருளாதார வளர்ச்சியில் பங்கெடுத்துக் கொள்ளவும் முனைகின்றன என்ருர். இந்த நாடுகள் தமது ஆயுதபலமின்மையால் யுத்தம் வேண்டிநிற்கும் நாடுகளுடன் ஆயுதப்பரிரணத்தைவேண்டிச் சமாதான உறவுகளை வளம்படுத்த முன்நிற்கின்றன என்று தெரிவித்தார்.

எனவே உலக மக்களின் சுதந்திரத்திற்கும், சமாதானத்திற்கும், அமைதிக்கும் வழிகோலும் அத்தனை முயற்சிகளிலும் ஈடுபடுவதுதான் அணிசேரா நாடுகளின் இன்றைய கடமை. இதற்கு மாருக சூழ்ச்சிகளுக்கும், பொய்ப்பிரச்சாரத்திற்கும் இரையாகி மற்றுமொரு உலக யுத்தத்தைத் தோற்றுவித்து மக்களை அழிவுப்பாதைக்கு இட்டுச்சென்று தமது வர்க்க லாபம்பேண எடுக்கும் அத்தனைமுயற்சிகளும் பஞ்சாய்ப் பறக்கும் என்பதை வரலாறுகள் காட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிரந்தர பரிகாரம் காண திடசங்கற்பம் பூணுவோம் — தோட்டத்தொழிலாளர்கள்

அன்றைய ஆங்கிலேய ஏகாதிபத்திய காலனியாதிக்கத்தின் கீழ் அடிமைகளாக வாழ்ந்த காலம்முதல் மலையக தோட்டத் தொழிலாளர்களாகிய எமது வாழ்க்கை ஒரு கண்ணீர்க் கதையாகத் தொடர்ந்த வண்ணமேயுள்ளது. சமூக அரசியற் பொருளாதார அடிப்படையில் மட்டுமன்றி மனோரீதியிலும் அடக்கியாளப்பட்டு வரும் நாம், எமது வாழ்வின் மேன்மைக்காகச் சிந்திய செந்நீர்த் துளிகள் பல, ''கொடுமைகள் தாமாகவே அழிவதில்லை'' என்பதற்கு ஆதாரமாக எம் முன் இருந்த ஒவ்வொரு கட்டுக்களையும் அறுத்தெறிவதற்கு போர்க்கொடி தூக்கவேண்டிய நிலையிலேயே வாழ்ந்து வந்திருக்கின்றோம்.

இத்தகைய நிலையிலே உலகளாவி பரந்துபட்டு சுரண்டலுக்கும், அடக்குமுறைகளுக்கும் உள்ளாகி இன்னல்களை அனுபவித்துவரும் தொழிலாள வர்க்கம், தன்து விலங்குகளை உடைத்தெறிய கிளர்ந்தெழுந்ததன் தாக்கம் எம்மவர்களையும் தட்டியெழுப்பியது. இதன் விளைவாக எம் மக்களின் துயர்துடைக்கவென திரு. நடேச ஐயரின் பெருமுயற்சியுடன் முதலாவது தொழிற்சங்கம் 1931ம் ஆண்டிலே ''அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கம்'' என்னும் பெயருடன் உருவெடுத்தது.

பின்னர் காலத்துக்குக் காலம் புற்றீசல்கள் போல் எழுந்த பல வேறு தொழிற் சங்கங்களும் தொழிலாளர்களின் பிரச்சனைகளை தீர்க்கப் போவதாக முழங்கினாலும் இன்றுவரை இத் தொழிற்சங்கங்களினாலாவது எமது அடிப்படைப் பிரச்சனை தீர்க்கப்படாமல் தொடர்ந்த வண்ணமேயுள்ளது.

இந்த நாட்டில் உழைப்பவர்களாகிய நாம் சாதாரண மக்களுக்கு வழங்கப்படும் உரிமைகளைக்கூட பெறமுடியாத நிலையில் இருக்கின்றோம். அதாவது சாதாரண மனிதனுக்குள்ள அடிப்படைச் சுதந்திரந்தானும் இன்றி வாழ்கின்றோம். முதலாளித்துவ அரசாங்க அரசியற் சூதாட்டத்தினாலும், அயல் நாட்டு ஒப்பந்தத்தாலும் அனாதைகளாக்கப்பட்டு அல்லலுற்று வாழும் ஈழவராகிய நாம் சமூக அரசியற் பொருளாதார விமோசனத்திற்கு உடமைப் பாட்டுப் போராட்டத்தை நடாத்தி நிரந்தர பரிகாரம் காண தொழிலாள வர்க்கத்தின் தினமாகிய மேதின நன்னாளில் திடசங்கற்பம் பூணுவோம்.

# பொருளாதார மாற்றத்திற்கு வழிகோலுவோம் — விவசாயிகள்

உணவு உற்பத்தியில் தன்னிறைவு காணும் சாத்தியங்கள் பலவிருந்தும் அரசின் திட்டமிடப்படாத பொருளாதார கொள்கையினால் உற்பத்தி இன்று வீழ்ச்சி அடைந்து வருவதோடு உற்பத்தியாளர்களாகிய நாமும் சொல்லொணாக் கஷ்டங்களுக்குள் உழன்று வருகின்றோம்.

மனிதனது அத்தியாவசிய உணவுப்பொருளாகிய நெல்லை ஈழத்தின் பெரும்பான்மையான பிரதேசங்களில் கூடுதலாக கிழக்கு மாகாணப் பிரதேசங்களில் உற்பத்தி செய்து வருகிறார்கள். அத்தோடு உப உணவு உற்பத்தியிலும் பெரும்பான்மையானோர் ஈடுபட்டு வருகின்றனர். இன்று யாழ்ப்பாண குடாநாட்டில் பெருமளவில் உற்பத்தி செய்யப்படும் வெங்காயம், மிளகாய் மற்றும் சிறுதானியங்கள் என்பன சமனற்ற பொருளாதார கொள்கையினாலும், உற்பத்திக்குத் தேவையான மூலப் பொருட்களின் விலைவாசி உயர்வினாலும் விவசாயிகள் உற்பத்தி செய்வதை நாளுக்கு நாள் குறைத்து வேறுதொழில்கள் செய்வதில் நாட்டம் கொள்கின்றனர்.

இன்றைய முதலாளித்துவ அரசின் தாராள இறக்குமதிக் கொள்கையால் உள்ளூர் உற்பத்தி மேலும் மேலும் வீழ்ச்சியடைந்த வண்ணமே வருகின்றது. உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருட்களை அதிக விலைக்கு வாங்கி உற்பத்தி செய்துவிட்டு அதை சந்தைப்படுத்த விழையும்போது இறக்குமதியாகும் பொருட்களின் விலைகளிலும்பார்க்க உள்ளூர் உற்பத்திப் பொருளின் உற்பத்திச்செலவு அதிகமாகிறது. இதனால் சந்தைப்படுத்துவதில் விவசாயிகள் மிகவும் நஷ்டத்திற்குள்ளாகின்றனர்.

எனவே இந்நிலையில் இருந்து மாறுபட்டு ஒரு திடமான பொருளாதாரக் கொள்கையைக் கடைப்பிடிப்பதன்மூலம் உள்ளூர் உற்பத்திக்கு முழு அளவிலான ஒத்துழைப்பு வழங்குவதின் மூலமும் இன்று தோன்றியிருக்கும் அவலநிலையை ஒருவாறு போக்கமுடியும்.

ஆனால், இந்நிலை மாறுமா? என்ற வினாவை எமக்குள்ளேயே எழுப்பவேண்டியுள்ளது. முதலாளித்துவ அமைப்பின் போக்கு நாளுக்குநாள் வலுவடைந்து வரும்போது எமது பிரச்சனைகள் மட்டுமல்ல இச் சமுதாயத்தின் அடிப்படைப் பொருளாதார சிக்கல்களும் வலுவடைந்து வருகின்றது.

எனவே, இத்தகைய போக்கு அடிப்படை மாற்றத்தின் அத்தியாவசியத்தை எமக்கு மட்டுமல்ல இச்சமுதாயத்தில் வாழும் ஏனைய தொழிலாள பாமர மக்களுக்கும்உணர்த்துகின்றது. அத்தகைய சமூக பொருளாதார விமோசனத்திற்கான அடிப்படை மாற்றத்தை ஏற்படுத்த உழைப்பாளர்வர்க்கத்தின் தினமாகிய இம் மேதினத்தில் உறுதி கொள்வோம்.

# சுரண்டலிலிருந்து விடுபட இன்றே உறுதி பூணுவோம் — சுருட்டுத் தொழிலாளர்

இலங்கையின் வடபகுதியில் குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் சுருட்டு உற்பத்தி முக்கிய இடத்தை வகிக்கின்றது. இன்று அத்தொழிலின் வியாபகம் குறைந்திருந்தாலும்கூட ஒரு காலத்தில் சுருட்டுத் தொழிலாளர்களின் போராட்டங்கள் மிகவும் பலம்வாய்ந்ததாக மிகப்பெரிய தாக்கங்களை தோற்றுவித்தது.

வடமாகாணத்தில் முதல் முதலாக மேதினத்தைக் கொண்டாடியவர்கள் சுருட்டுத் தொழிலாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

சுருட்டுத்தொழில் 100 வருடங்களுக்கு மேல் வடமாகாணத்தில் பரவலாகப் பல கிராமங்களில் ஒரு மிகப்பெரிய கைத்தொழிலாக அமைந்துள்ளது. கிட்டத்தட்ட 12,000 சுருட்டுத் தொழிலாளர்கள் இத் தொழிலை இன்று நம்பி வாழ்கின்றார்கள்.

இத் தொழிலாளர்களின் கஸ்டங்களைக் கவனிப்பதற்கு எந்த ஒரு அரசாங்கமும் முன்வராதது வருந்தத்தக்கதாகும். இத் தொழிலுக்குப் பாவிக்கப்படும் மூலப் பொருட்கள் எமது நாட்டிலேயே உற்பத்தியாகிறது. புகையிலை உற்பத்திசெய்வதிலும் வடமாகாணத்தில் 50,000 விவசாயிகள் வாழ்கின்றனர்.

சுருட்டுக் கைத்தொழிலை ஒரு கூட்டுறவுத்தாபனமாக ஆக்கி அவர்களின் உற்பத்தியில் ஏற்படும் சிரமங்களையும், வாழ்க்கைப் பளுக்களையும் நிவர்த்தி செய்யவேண்டும் என்று சுருட்டுத் தொழிலாளர் சங்கம் ஆட்சியாளரை பலமுறை கேட்டிருந்தும் அவர்கள் இதற்குச் செவிசாய்க்காமல் உதறித்தள்ளினர்.

1968ஆம் ஆண்டளவில் ஒரு வீதமாக இருந்த உற்பத்தி வரி இன்று 15 வீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. தனியார் துறையில் இத் தொழில் சிக்கியிருப்பதனால் சுருட்டுத் தொழிலாளர்கள் மிகவும் சுரண்டல் அவல நிலை[illegible]கின்றனர். இன்று சுருட்டுத் தொழிலின் சரி கூலியைப் பெறமுடியாதநிலையில் முதலாளிகள் கொடுக்கும் சம்பளத்தை வேண்டிச்செல்ல வேண்டிய கட்டத்தில் அடிமைகளாக வாழ்ந்துவருகிறார்கள். முதலாளிகள் சுருட்டுத் தொழிலாளரின் சேமலாபநிதி திட்டத்தைச் சரிவர இன்னும் நடைமுறைப்படுத்தவில்லை.

இதனால், சுருட்டுத் தொழிலாளர்கள் தமது தொழிலை நிரந்தரமாகச் செய்வதற்கோ, அன்றி அவர்களது இயலாமைக் காலங்களில் சீவியப் பாட்டை நடாத்தவோ ஏற்ற எந்தவித உத்தரவாதமும் இல்லாத நிலையில் ஒரு அடிமை வாழ்வில் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். சுருட்டு முதலாளிகளும் தமது இஸ்டம் போல் தொழிலாளர்களை ஆட்டிப் படைப்பதுடன் தனக்கு இஸ்டமில்லா நேரத்தில் அவர்களைத் தொழில்நிலையங்களிலிருந்து வெளியேற்றி நடுத்தெருவில் அலையவிடுவதுமான [illegible] அவர்களின் வாழ்க்கைத் தேவைகளை ஏற்படும் கஸ்டங்களை உதாசீனம் செய்து தமது சுரண்டலைமட்டும் மையமாகக் கொண்டு செயற்படுகின்றனர்.

மற்றொருபுறத்தில், முதலாளிகளிடமிருந்து ஒருவாறு தனது உழைப்புக்கான குறை ஊதியத்தைப் பெற்றுக் கொண்டு தனது குடும்பத்தின் சீவியப்பாட்டை ஓரளவு ஓட்ட முயலும்போது இச் சமுதாய அமைப்பின் கேடுகள், முதலாளித்துவ அரசின் பொருளாதார சீர்கேடுகள் அவர்களை மேலும் பாதாளத்தில் தள்ளுகின்றது.

இந்நிலையிலிருந்து முழுமையாக விடுபட்டு ''சக்திக்கேற்ற உழைப்பும், தேவைக்கேற்ப ஊதியமும்'' பெற்று சுதந்திர புருசர்களாக வாழ ஒரு புதிய சமுதாயம் ஒன்றை, சமத்துவ சமதர்ம சமுதாயமொன்றை உருவாக்கிட இம் மேதின நன்னாளில் உறுதி பூணுவோம்.

## உலக.....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

உறுதியான நிதர்சனமானசூழ்நிலையை உருவாக்கியுள்ளது என்று பேசினார்.

தற்போது புண்படுத்தப்படும் உலக விவகாரங்களின் நிலையில் யுத்த ஏற்பாடுகளுக்கு எதிராகவும், சமாதானத்தை உறுதிப்படுத்தவும், ஒரு புறம் கம்யூனிச நாடுகளுக்கிடையில் ஒத்துழைப்பை வளர்ப்பதும், மறுபுறம் சமூக ஜனநாயகக் கட்சிகள், தொழிற்சங்கங்கள் மதவட்டங்கள், ஜனநாயக சமாதானம் விரும்பும் சக்திகளிடையே ஒத்துழைப்பை உயர்த்துவதும், அவசியமான தொன்றாகும் என்று சோவியத் ஒன்றியத்தின் கம்யூனிச கட்சியின் பொதுச் செயலாளரும், சோவியத் தலைவருமான லியோனித் பிரஷ்நேவ் கூறினார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

# ஈழக்கோரிக்கையும்.....

பொது ஜன வாக்கு எடுத்த போது பிரித்தானிய தேசியக் கட்சிகளான 'லேபர்' கட்சியும், 'கன்ஸ்ரவேற்றிவ்' கட்சியும் தத்தமது கருத்துப்பாட்டுக்களைத் தெரிவித்த அதே வேளையில் 'ஸ்கொட்டின்' தேசியக் கட்சியும், வேல்ஸ் கட்சியும், குறிப்பிட்ட பிராந்திய அதிகாரம்பற்றிக் கருத்துப்பாடு தெரிவித்ததோடு நில்லாமல் தத்தமது திட்டங்களையும் வெளியிட்டன. இப்படியான ஒரு வழிமுறை நமது ஜனநாயக ரீதியிலான தேசியக்கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணியிடம் இல்லை என்றே சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் மாவட்ட சபைத் தேர்தல்பற்றி — அதற்கும் ஈழக்கொள்கைக்கு மிடையேயான பிணைப்புக்களையும்— நம்மக்கள் நலன் குறித்து மாவட்டசபை அபிவிருத்திக்கான மாற்றுப் பொருளாதாரத் திட்டத்தையும் தந்திருப்பார்கள். அப்படி ஒன்றைத் தலைவர் அமிர்தலிங்கமோ, அல்லது 'விடுதலைக் குரல்களோ' இதுவரை தரவில்லை என்றெ சொல்ல வேண்டும். இதனாலேயே, நமது அரசியல் தலைவர்கள் இதுவரைகாலும் ஈழவர்க்கெனச் சமூக அரசியல் பொருளாதார மேம்பாட்டிற்கான ஒரு திட்டத்தைத் தரவில்லை எனக் கூற முற்பட்டோம். கூறியதோடு நில்லாமல், இயங்கியல் ரீதியில் மாவட்டசபையின் பரிமாணங்களை வெறும் இனவாரி நலன் குறித்துப் பார்க்காமல் ஏகாதிபத்திய சுரண்டலை மையமாக வைத்து இலங்கையையும், இலங்கையில் இருக்கக்கூடிய ஈழவரின் தேசிய அந்தஸ்து நெறிசார்ந்து சமூக பொருளாதார அரசியல் கண்ணோட்டத்தில் அணுகி, 'அபிவிருத்தியா அடகுவைப்பா' எனக் கேட்க முற்பட்டோம்.

இலங்கை, இன்று அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கைப்பொம்மையாகி வருகிறது என்ற தர்க்கீக வாதத்தை வெளிநாடுகளில் உள்ள சுயேட்சவாத [Liberal] சிந்தனை உடைய இலங்கையர்களும் உணர்ந்துவருகின்றனர். உதாரணத்திற்கு வெகு அண்மையில் இங்கிலாந்தில் வெளிவந்த இரு பத்திரிகைகளின் கருத்துக்களை எடுத்துக்கொள்வோம். பெப்ரவரி 4ஆம் திகதியன்று, இலண்டனில் வெளியாகும் பிரபல தினசரியான 'கார்டியன்' பத்திரிகையில், ''மூன்றுவது உலக விவகாரம்'' பற்றிய பகுதியில், எழுதிய இலங்கையரான திரு. நெவில் ஜெயவீர, 'இன்று இலங்கைமுழுக்க முழுக்க வெளிநாட்டு நிதியுதவியையே நம்பி இருக்கிறது. இன்று உலகிலேயே கூடுதலாக அந்நிய உதவியைப் பெறும் நாடு இலங்கை. அதாவது தனிநபரிற்குச் சராசரி 65 டொலர் (1040/-) விகிதம் அந்நிய உதவியைப் பெறுகிறது. இதை இன்னும் எவ்வளவு காலத்துக்கு ஜயவர்த்தன அரசாங்கம் இத்தகைய நிதி வரவை எதிர்பார்க்கமுடியும் ? இந்த நிதிஊற்று வற்றியதும் (நிச்சயமாக வற்றும்) பின் என்ன செய்யப் போகிறது ? எனக் கேட்கிறார்.' இந்தக் கேள்வியைக் கேட்பதற்கான காரணம் நாட்டின் நெருக்கடியான பொருளாதார நிலமையே ! அதையும் அவர் விபரமாகத் தருகிறார் : ''1978இல் 8·2% இல் வளர்ந்துகொண்டிருந்த பொருளாதார அபிவிருத்தி, இன்று 5·2% மளவுக்குக் குறைந்துள்ளது. விவசாய உற்பத்தி 78-ல் 5 விகிதத்திலிருந்து 80-ல் 1.7 விகிதம் குறைந்துள்ளது. வெளிநாட்டுக் கணக்கில் (Balance of Payment) 1978-ல் 1 பில்லியன் ரூபா கடன் பற்றுக இருந்தது: 1979-ல் 3·5 பில்லியன் ரூபா கடனாகக் கூடியது. இப்போ 5 பில்லியன் ரூபா பற்றுக் குறைவு நிலையிலுள்ளது. இந்தப் பற்றுக்குறையை, வெளிநாட்டு நிதியுதவியுடனும், முக்கியமாகச் சர்வதேய நிதி ஸ்தாபனத்தின் (I. M. F) பணத்தின் மூலமே அடைக்கப்படுகிறது.'' என்கிறார். அத்தோடு, ''இந்த நெருக்கடியான இலங்கையின் பொருளாதார நிலமையில், அதாவது — நிதி மந்திரியின் 81-ம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தின்படி, ஏற்றுமதித் தொகையாக ஒரு சதவிகிதம்கூட இறக்குமதித் தொகை 23%அதிகரிக்க, அதனால் ஏற்படும் 15 மில்லியன் ரூபா கடன் பற்றினால் பாதிக்கப்படும் அபிவிருத்தியாலும்—அதனாலான 15 விகிதம் அதிகரித்துக்கொண்டே இருக்கும் வேலையில்லாதோர் தொகையும், 40% பணவீக்கம் ஆகியன, சர்வதேச நிதித்தாபன எண்ணப்பாட்டினடிப்படையிலான ஜயவர்த்தனாவின் கட்டுப்பாடற்ற பொருளாதார அமைப்பும் நோக்கும் ஆழ்ந்த நெருக்கடிக்குள்ளாகி வருகிறது. இந்த நெருக்கடியின் முடிவு, இன்று உலகை எதிர்நோக்கியுள்ள பொருளாதாரத் தேக்கம், உயர் விலைவாசி, பணவீக்கம் போன்ற பிரச்சினைகளால், உலக நாடுகளை உலுக்கிக்கொண்டிருக்கும் சர்வதேச முதலாளித்துவ நெருக்கடியால் ஏற்படும் விளைவினால் மட்டுமே நிர்ணயிக்கப்படுமேயன்றி, ஜயவர்த்தனாவால் நிர்ணயிக்க முடியாது'' என்கிறார்.

இங்கு ஓர்அடிப்படை உண்மையைச் சூட்சுமமாகச் சொல்லிவைக்கிறார் நெவில் ஜயவீர, அதாவது, அமெரிக்க உதவியுடனும், அமெரிக்க ஏகாதிபத்திய நலன் சார்ந்தும் இயங்கும் நிறுவனங்களான உலக வங்கி, சர்வதேச நிதி ஸ்தாபனம் ஆகியவற்றின் உதவியின் அடிப்படையிலான பொருளாதார அபிவிருத்தி நாடும் நாடுகள் படிப்படியாக தமது சுதந்திரமான பொறுப்பை இழந்து உதவிபுரிவோரின் கைப்பொம்மையாகி விடுகிறது என்பதேயாகும். இதற்கு இலங்கை விதிவிலக்கல்ல.

இந்தக் கருத்தையே 'சவுத்' (South) தெற்கு என்ற இதழில் எழுதிய திரு. சிறிவர்த்தனவும் 'பாதகமான சர்வதேச சூழ்நிலைகளால் ஏற்படக்கூடிய தாக்கங்களால் இலங்கை போன்ற நாடுகள் எவ்வளவு தூரம் பாதிக்கப்படுகின்றது என்பதை இன்றைய சூழ்நிலை எடுத்துக்காட்டுகிறது. இலங்கையின் ஜனநாயக அமைப்பிலும் கூட, அதே அமைப்புகள் அரசியல் ரீதியில் இலங்கையை உலக வங்கியினதும், சர்வதேச நிதி நிறுவனத்தினதும் காட்சிக் கூடமாகிவிட்டது' என்கிறார்.

இந்தவிதமான வெளிநாட்டு நிதி உதவியாலும் பொதுவாக இலங்கையும், இலங்கையரும் பாதிக்கப்படுவதாயினும், கூடுதலாக வெளிநாட்டு ஊடுருவலால் பாதிக்கப்படுவது தமிழர்களே ! உதாரணத்திற்கு, திருமலையில் மாஆலை நிறுவியதன் மூலம் திருமலை மாவட்ட மக்கள் பலன் அடைந்தார்களா ? இல்லை. பதிலுக்கு, அபிவிருத்தி என்ற பெயரில் கட்டாய குடியேற்றத் திட்டத்தைக் காண்கிறோம். இதனால்தான் பிராந்திய அபிவிருத்தி மாவட்ட சபை என்ற பெயரில் ஏற்கனவே சட்டமூலமும் சதிமூலமும் இரண்டாந்தர பிரஜைகளாக்கப்பட்டு வரும் தமிழ் மக்கள் உலகநிதிப் பலத்தினதும், முதலாளித்துவ ரீதியிலான சோவனிசத்தினதும் பிரதிபிம்பமான இலங்கை எதேச்சாதிகார அரசு என்ன நிலைக்குள்ளாகுமோ என்ற கேள்வியை எழுப்ப முற்பட்டதோடல்லாமல், அதன் முரண்பாடுகளையும் பார்க்க முற்பட்டோம். இதனாலேயே இன்றைய பிரச்சனை மாவட்ட அபிவிருத்திச்சபை பற்றியதல்ல— ஈழக்கோரிக்கை பற்றியது என மீண்டும் இடித்துக்கூறுகிறோம். இந்த இடித்துரைத்தல் இன்றைய இலங்கை பூர்சுவா அரசியல் சூழ்நிலையில் அவசியமாகிறது. இதைத் ''தெற்கு'' பத்திரிகையில் திரு. சிறிவர்த்தன வெளியிட்ட தகவல் ஊர்ஜிதப்படுத்தும்.

''இன்றைய அரசியலில் ஒரு புதிய ஆதிக்க பலப்பரீட்சை விளையாட்டு நடைபெற்று வருகிறது, முன்னாள் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் உரிமைகள் பறிக்கப்பட்டு, பாராளுமன்றத்திலிருந்து வெளியேற்றப்பட்டு, ஒரு மாதத்திற்குள், அம்மையார் யாழ்ப்பாணத்தில் ஐந்து கட்சி எதிரணிக் கூட்டத்தில் பங்குபற்றினர். தனது இழந்த செல்வாக்கையும், ஐக்கிய தேசியக் கட்சிக்கெதிரான அணியையும் உறுதிப்படுத்த திருமதி பண்டாரநாயக்கா நாடிய மேடை, தமிழர்களின் தாய்க்குடி நிலமான யாழ்ப்பாணத்திலேயே. கடந்த நவம்பர் மாதம் கூட்டப்பட்ட ஐந்து கட்சிக் கூட்டத்தில் வேடிக்கை என்னவெனில், அக்கூட்ட மேடையில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலை... [illegible] ...ழர் விடுதலைக் கூட்டணியினர் வெறும் பேச்சளவில் தமது அரசியல் ராஜ தந்திரமாகத் 'தமிழ் ஈழம்' என்ற தனி நாடு அமைப்பதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளனர். இந்த விநோதமான சேர்க்கை மிகவும் விகற்பமாகத் தோன்றியதற்குக் காரணம் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் தான், தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தமது இளம் சந்ததியினரின் விருப்புக்கும் எதிர்ப்புக்கும் மாறாக ஜெயவர்த்தன அரசாங்கம் அமுலாக்கிய மாவட்ட அபிவிருத்திச் சபை மசோதாவுக்குச் சார்பாக வாக்களித்தனர். அப்போ இந்த மசோதாமூலம் தமிழர்களுக்கு அதிக சலுகைகள் வழங்குவதாகக் கூறி இனக்குரோதத்தை விளைவிக்க இருந்தது ஸ்ரீலங்கா சுதந்தரக் கட்சி. இதற்கும் மேலாக, திருமதி பண்டாரநாயக்கா 70வது முதல் 77 வரை ஆட்சியிலிருந்தபோது தமிழர்களைப் பாதிக்கும் வண்ணம் நடந்துகொண்டபோதும், மீண்டும் 80இல் யாழ்ப்பாணத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியினருடன் ஒரே மேடையில் கூடியது கேலிக்கிடமானதே. இதற்குப் பின்னணியான காரணம், 1983 இல் நடக்கஇருக்கும் தேர்தலும் அதன் முக்கியத்துவமுமே. இன்றைய அரசியல் சாசனத்தின்படி, 1983 ஆம் ஆண்டுத் தேர்தல் சனவிகிதாசார அடிப்படையிலேயே போட்டியிடப்படும். இதன்படி தென்னிலங்கையில் முக்கியமான கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியோ அல்லது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியோ கூடுதலான பெரும்பான்மையைப் பெற்று ஆட்சியமைப்பது கடினம். இந்த ரீதியில் ஆட்சிக்குவருவதானால் தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் ஆதரவை நாடவேண்டியிருக்கும். இதனாலேயே திருமதி பண்டாரநாயக்கா தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆதரவைப்பெற முயற்சிக்கிறார். ஆனால் தமிழர்விடுதலைக் கூட்டணியைப் பொறுத்தவரை அது இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியின் காரணமாக ஐக்கிய தேசியக் கட்சியின்மீது ஏற்பட்டுள்ள அதிருப்தியே, அவர்களைச் சுதந்திரக் கட்சிப் பக்கம் நாட உந்துகிறது. சுதந்திரக் கட்சியுடன் ஆன இணக்கத்தையும், பிணைப்பையும் காட்டித் தமிழர்களுக்கு கூடுதலான சலுகைகளை ஐ.தே.க. அரசாங்கத்திடம் இருந்து பெறுவதே த. வி, கூ. யினரின் நோக்கம்'' என்கிறார்.

த. வி. கூ. யினரின் போக்குப் பற்றிய கண்ணோட்டம், சுயேட்சை சிந்தனையாளரான றெஜி சிறிவர்த்தனவினது தனிப்பட்ட கண்ணோட்டமேயாயினும், நிதர்சன நிலையை விளக்குகிறது. ஆனால் இயங்கியல்ரீதியில் ஆய்வோருக்கு, இப்பிரச்சனை தெளிவாகும். அதாவது மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலில் த. வி. கூ, தலைவர் அமிர்தலிங்கம் கூறிவருவதுபோல் போட்டி போட்டால். மாவட்ட அபிவிருத்திச் சபையின் மகோன்னதம்பற்றி, அல்லது மாவட்ட அபிவிருத்திச் சபையின் அபிவிருத்தியும், எதிர்காலமும் என்ற ரீதியில் தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் மாற்றுத் திட்டங்கள்பற்றி மக்களிடையே பிரச்சாரத்தில் ஈடுபடவேண்டும். அதேவேளையில் கூட்டணி மாவட்ட அபிவிருத்திச் சபையை ஆதரித்த காரணத்தாலும், அதன் மகோன்னதத்தைப் பறைசாற்றுவதாலும், கூட்டணியினரின் எதிர்ப்பினர் முக்கியமாக அரசதரப்பினரும்; ஆதரவாளர்களும் அடிவருடி வாழ்பவர்களும் இந்தச் சூழ்நிலையைத் தமது பிரச்சாரத்தில் பயன்படுத்த முயல்வார்கள். அத்தோடு காலத்திற்குக் காலம் வாக்களிப்பதைத் தவிர வேறெதையும் கண்டிராத தமிழ் பேசும் மக்களை ஒரு குழப்பமான சூழ்நிலைக்குள்ளாக்குவர். இதனால் ஏற்படும் விளைவுகள் ஈழக்கோரிக்கையில் பலத்த தாக்கத்தை ஏற்படுத்தும். தலைவர் அமிர்தலிங்கம் எண்ணுவது போல், ''பெரும்பான்மையான சபைகளைக் கைப்பற்றினாலும் கூட'' ஏனைய மாவட்ட சபைகளைக் கைப்பற்றும் எதிர்த்தரப்பினரால் ஈழக்கோரிக்கை விவாதத்திற்குரியதாகி, மாவட்டசபையின் மகோன்னதம் பற்றி எஃகப்படும். இதனால் ஈழக் கோரிக்கை இறுதியில் ஒற்றை ஆட்சிக்கு உட்பட்ட மாவட்ட சபைகளாக மாறிவிடுமோஎன ஐயப்படவேண்டியுள்ளது. அப்படியாகுமானால் குடியேற்றம், இனஒடுக்கல் மற்றும் இன்னோரன்ன முறைகளால் சதா பாதிக்கப்பட்டு வரும் தமிழினம் காலப்போக்கில் அடையாளமற்ற இனமாகிவிடுமோ என எண்ணவேண்டி இருக்கிறது- இதனாலேயே, இன்றைய பிரச்சனை, இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களின் எதிர்காலம் பற்றியது, ஈழக்கோரிக்கைபற்றியது எனக் கூற முற்பட்டோம். இருந்தும், மாவட்ட சபைத் தேர்தலில் ஈழக்கோரிக்கையை பிரதிபலிக்கச் செய்யவேண்டியது, இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களின் கடமை. இதை எடுத்துக் கூறுவதே தர்க்கீகத்தின் தலையான பொறுப்பு.

ஆனால் ஈழக்கோரிக்கையை 77ஆம் ஆண்டுத் தேர்தலின் மூலமும், இப்போ மாவட்ட சபைத் தேர்தலிலும் பிரதிபலிக்கச் செய்துவிட்டால் போதாது. அதேபோல் 1983ஆம் ஆண்டு பிரதிபலிக்கச்செய்வோம் என்று இருந்துவிடக்கூடாது, பதிலுக்கு அதன் பிரசவத்திற்கான கைங்கரியங்களில் ஈடுபடவேண்டும். அந்தவகையில் ஈழப் பிரசவத்தை நிர்ணயிப்பவர்கள் ஈழவராயினும்—அந்த மக்கள் சக்தியாயினும் அதன் ஆக்கபூர்வமான வேலைப்பாடுகளும், பெறுபேறுகளும் உலக சக்திகளைப் பொறுத்துள்ளது. இதனால் தான் திரு. நெவில் ஜெயவீர, ''இலங்கையின் எதிர்காலத்தை ஜெயவர்த்தனவால் நிர்ணயிக்க முடியாது. முரண்பாடு முற்றிய முதலாளித்துவ நாடுகளால்தான் நிர்ணயிக்க முடியும்'' என்கிறார். ஆனால் ஈழவராகிய நாம் நாடுவது முதலாளித்துவ சமுதாயமல்லவே ; சமத்துவ, சமதர்ம, சமுதாயத்தையே இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் நாடுகிறார்கள். இந்தவிதத்தில் உலகிலுள்ள சோசலிச நாடுகளுக்கும், முதலாளித்துவ நாடுகளுக்கும் உள்ள முரண்பாடுகளை ஆய்வதன் மூலம் இலங்கையின் அடிப்படைப் பிரச்சனையும், ஈழவரின் தனிப்பட்ட பிரச்சனையும் புலனாகும்; அதன் அடிப்படையிலேயே எதிர்காலத்தை நிர்ணயிக்க 'தர்க்கீகம்' தர்க்கிக்கும்; தர்க்கித்துப் போராடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேதின ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மிருந்து 19, 20 மணி நேர வேலை கூட ஈவிரக்கமின்றிக் கறக்கப்பட்டதாம்.

இதனால் குறைந்த நேர வேலைத்தேவை சிறப்புற உணர்ந்த தொழிலாளர்கள் சில சுயேச்சையான தொழிற்சங்கங்களை உருவாக்கி 10மணி நேர வேலைகோரி வேலை நிறுத்தங்களில் இறங்கினர். 1820 முதல் 1830 வரை பெருமளவில் சூடு பிடித்த தெனலாம். உலகின் முதற் தொழிற்சங்கமாகக் கருதப்படும் பிகடெல்பியா தொழிற்சங்கம் இவற்றில் முக்கிய பங்கு வகித்திருந்தது. இத்தகைய வேலைநிறுத்தங்கள் பெருமளவில் அமெரிக்காவிலேயே நடைபெற்றன, 1834ம் ஆண்டளவில் நியூயோர்க் நகரில், ஒரு நாளைக்கு 20 மணி நேர வேலை செய்ய வேண்டுமென்ற கட்டாயத்திலிருந்து ரொட்டித் தொழிலாளர்கள், திரண்டெழுந்து செய்த வேலைநிறுத்தம் முதலாளிகளை சிறிது மசியவைத்தது. இப் பகுதிகளில் 10 மணி நேர வேலைக்கோரிக்கையால் தொழிலாளர்கள் ஒன்றுபட்ட நிலையை உணர்ந்து, வான்பிரான் என்பவர் அரச ஊழியர்களுக்கு 10 மணி நேர வேலை கொடுக்கத் தீர்மானித்தார். ஆனால் தொழிலாளர்களிடையே இருநீத ஒற்றுமையின் இறுக்கம் அரச ஊழியருக்கு மட்டுமன்றி அனைத்து ஊழியர்களுக்கும் 10 மணிநேரவேலை வேண்டுமென்ற பிடிவாதத்தை எழுப்பவைத்தது. இக்கோரிக்கை குறித்து அவர்கள் நடாத்திய ஆர்ப்பாட்டங்களால் சில இடங்களில் வெற்றி கிடைக்க ஆரம்பித்தது.

இவ்வெற்றியின் உத்வேகத்தாலும், 8 மணி நேர வேலைக் கோரிக்கை குறித்து பல இடங்களிலும் கருத்துக்கள் பரவிவிட்டிருந்தாலும், தொழிலாளர் 8 மணி நேர வேலைக் கோரிக்கையை முன்வைக்க முனைந்தனர். உலகம் பரவலாக இக் கோரிக்கைக்கு ஆதரவு கிடைத்து வந்தது.

1864ம் ஆண்டு கார்ல் மாக்ஸ், எங்கெல்ஸ் ஆகியோரால் ஆரம்பிக்கப்பட்ட முதலாவதுஅகிலம்(First International) 1866ம் ஆண்டு செப்டம்பரில் கூட்டிய மாநாட்டில்'ஒரு நாளைக்கு 8 ம நேரவேலை என்பது சட்டரீதியான வரையறையாகக்கொள்ள வேண்டும்' என்று முன்மொழிந்தது. மேலும் அங்கு, சுயேச்சையான தொழிற்சங்கங்களின் தொழிற்பாடுகள் அவை உலகு தழுவிய ஒற்றுமையைப் பேணுவிடில் ஸ்தம்பிதமடைந்து செல்ல வேண்டியிருக்கு மென்றும் அறிவுறுத்தப்பட்டது.

ஆனால், அநேக தொழிற்சங்கங்களில் பிற்போக்குவாதிகள் புகுந்து, முதலாவது அகிலத்தின் தீர்மானங்கள் குறித்து இழுபறிப்பட்டு, ஈற்றில் வேலை நிறுத்தங்களை ஸ்தம்பிக்கச் செய்தனர். இத்தேக்கம் சில காலம் நீடித்தது.

## மேதின உதயம்

1884-1885 ஆண்டிடைகளில் அமெரிக்காவில் ஏற்பட்ட தொழில் சோம்பல் தொழிலாளர்களிடையே பெருமளவில் துன்பம், பசி, வேலையின்மை போன்றவற்றை உற்பத்தி செய்தது. இதனால் தொழிலாளர்களின் உந்துதலால் தொழிற்சங்கங்கள் மீண்டும் விழிப்படைந்தன. அப்போது தொழிலாளர்களிடையே இருக்கவேண்டிய கூட்டமைப்பின் அவசியமும் கூடவே உணரப்பட்டது. இதன் விளைவாக 1884ல் அமெரிக்கா, கனடா போன்ற இடங்களில் உள்ள பல தொழிற்சங்கங்களை உள்ளடக்கிய தொழிலாளர் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டு, சிக்காக்கோ நகரில் அக்டோபர் 7ம் திகதி ஒரு மாநாடும் நடாத்தப்பட்டது. **1886ம் ஆண்டு மே மாதம் 1ம் திகதி அமெரிக்காவிலும் கனடாவிலும் 8 மணி நேர வேலைக்கு சட்டரீதியான அங்கீகாரம் கோரி ஆர்ப்பாட்டம் நடாத்தவேண்டுமென மாநாட்டில் தீர்மானித்தனர்.** அத்துடன் மேற்படி கூட்டமைப்பில் அங்கத்துவம் பெறும் ஒவ்வொரு தொழிற் சங்கமும் முடிவு சாதகமாகக் கிடைக்கும் வரை போராட வேண்டுமென்றும், அதற்கேற்ற பணம் முதலான ஆயத்தங்களை முன்கூட்டியே செய்யப்பட வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டது.

தொழிலாளர் கூட்டமைப்பு உருவாக்கப்பட்ட பின்னர் தொழிலாளர்கள் மத்தியில் உற்சாகம் பிறந்திருந்தது. அவர்கள் வேலைநிறுத்தங்களுக்குத்தம்மைத் தயார்ப்படுத்திக் கொண்டனர். சில பிற்போக்குச் சக்திகள் இக்கூட்டமைப்பை உடைக்க முயன்றும் அது சாத்தியப்படவில்லை. தொழிலாளர்களிடம் ஒரு தனி வேகம் தென்பட்டது.

திட்டமிட்டபடி தொழிலாளர்கள் 1886-05-01 இல் வேலைநிறுத்தத்திலும், ஆர்ப்பாட்டத்திலும் குதித்தனர். சிக்காக்கோ. நியூயோர்க், பால்டிக்மோர், வாஷிங்டன், மில்வாவ்கி,சின்சின்னடி, செயின்ட் லூயி, பிஸ்ட்றிச் போன்ற இடங்களில் சிறப்பாக நடைபெற்றது. இவற்றின் மையநகரமாக சிக்காக்கோவைக் குறிப்பிடலாம். இவ்வேலை நிறுத்தமும், ஆர்ப்பாட்டமும் தொழிலாளர் கூட்டமைப்பினால் முன்னெடுத்துச் செல்கையில், நடைபெற்ற அனுதாப வேலை நிறுத்தங்களும், உதிரியான தொழிலாளர்களின் பங்கும் மிகவும் குறிப்பிடப்பட வேண்டியஅம்சமாகும். தொழிலாளர்களிடையே புரட்சி மனநிலை பூக்கத் தொடங்கியது.

இந்நிலைப்போக்கு அக்டோபர் புரட்சிக்குப் பின் மேதினத்தின் முக்கியத்துவம் வலுவடைந்து இன்று உலகளாவி விரிவுபட்டுள்ளது. இந்நிலையில் ஈழத்திலும் ஈழவர் வரலாற்றில் தொழிலாளர்கள் தொழிற்சங்கங்கள் அமைத்து தமது உரிமைகளுக்கான போராட்டங்களில் ஈடுபடத் தொடங்கினார்கள். இந்த உலகப் பாட்டாளி வர்க்கத்தின் ஒருமைப்பாடு மேதினத்தின் மூலம் மேலும் மேலும் வலுவடைய வழிவகுத்துள்ளது.

## ஈழவர் சுவடுகள்

ஈழத்தில் இன்று ஒரு நாளைக்கு 8மணி நேர வேலைக்கு கூடுதலான நேர வேலை இல்லை என்று கண்மூடித் தனமாகக் கூறமுடியாது. தனியார்துறை நிறுவனங்களிலும், வியாபார ஸ்தாபனங்களிலும் தொழிலாளர்களிடம் 8 மணிக்கு கூடுதலான வேலை வாங்கப்படுகின்றது. தோட்' த் தொழிலாளர்களும் இதற்கு விதிவிலக்கல்ல. இது மட்டுமல்ல வேலை நிறுத்தங்களில் ஈடுபட்டு வேலை இழந்து சீவனப்பாட்டுக்கு அல்லலுறும் தொழிலார்களை கண்மூடித்தனமாக தொழிற் சங்கங்கள் விட்டுவிடாது அவர்களின் பிரச்சனைக்கு தீாவுகாண முற்படுவதோடு தொழிலாள வர்க்கத்தின் சமூக பொருளாதார மாற்றத்திற்கும் வழிகோல முற்படவேண்டும்.

எனவே பாட்டாளி வர்க்கத்துடன் இவ்வுதிரியாய் இருக்கும் தொழிலாளர்களையும் விழிப்படையச் செய்து சமுதாய மாற்றத்திற்கு அடிகோல முற்படுவதோடு உலகத் தொழிலாளர் ஒற்றுமைக்காகவும், ஏகாதிபத்திய ஒழிப்பிற்காகவும் மேதினத்தை ஒரு சிறப்பு நாளாக கொண்டாட வேண்டியது எமது கடமையாகும்.

## அமெரிக்க....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

நான் இவருக்குப் பதிலளிக்கும்போது, இவர் சர்வதேசியவாதியில்லாமல் தேசியவாதியாக விவாதிக்கிறார் என்றும் இவரின் விவாதங்கள் நேட்டோ வாதத்தின் பிரதிபிம்பமே என்றும், சோவியத் ஒன்றியம் தன் பாதுகாப்பை சிறிதளவேனும் பாதிக்காமல் SS-20 களை இன்னும் குறைக்கலாம் என்று கூறினேன். மேலும் சோவியத் ஒன்றியத்தின் இந்த நடவடிக்கையைத் தவிர வேறெதுவும் ஐரோப்பிய சமாதான இயக்கத்தை வலுப்படுத்தாது என்றும் சுட்டிக் காட்டியுள்ளேன்,

இப்பத்திரிகை ஊரெழு கிழக்கு எஸ், விக்னேஸ்வரன் அவர்களால் யாழ்ப்பாணம் பிரதான வீதி 360- இலக்கத் திலுள்ள புனிதவளன் கத்தோலிக்க அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

உங்கள் ஆக்கங்களை 'தர்க்கீகம்' வரவேற்கின்றது, அதே வேளையில் தர்க்கீகத்தை நீங்கள் திறனாய்வு செய்யலாம். அதன் மூலம் 'தர்க்கீகம்' மேலும் தன்னை செழுமைப்படுத்திக் கொள்ளும். உங்கள் ஆக்கங்கள் எங்கள் சமூக நிலையை எடுத்துரைப்பவையாகவும் சமூக மாற்றத்தைக் கோருபவையாகவும் அமையட்டும்.

**"தர்க்கீகம்"**

த. பெ. எண். 103, யாழ்ப்பாணம்.



உலகில் இன்று தோன்றியிருக்கும் சூழ்நிலையில் ''உலகப் பாட்டாளி வர்க்கமே ஒன்று சேர்'' என அன்று வித்தகன் கார்ல் மார்க்ஸ் கூவியழைத்தபோது அதன் தார்ப்பரிய உண்மையை அன்று விளங்கிக் கொள்ள முடியாவிட்டாலும் இன்று இதன் வலிமை எத்தகையது என்பது தெளிவாகப் புரிகின்றது. உலக மக்களைச் சூழ்ந்திருக்கும் நெருக்கடிகளிலிருந்து அவர்கள் விடுபட பாட்டாளி வர்க்கமனைத்தும் ஒன்றுபட வேண்டும் என்பதன் அவசியம் தற்போது வலுவடைந்து வருகின்றது.

இந்நிலையில்தான் உலக சமாதானத்தையும், அமைதியையும் பேணிக் காப்பதோடு மக்களின் சுதந்திரமும், உரிமைகளும் பேணப்பட வேண்டும் என்ற அடிப்படையில், சமத்துவ சமதர்ம சமுதாயமொன்று உலகளாவி விரிவுபட்டு நிரந்தர பரிகாரங் காணவேண்டும் என்ற இயங்கியல் அடிப்படையில் உலகப் பாட்டாளி வர்க்கம் தனது ஒற்றுமையையும், அடிப்படை ஒருமைப்பாட்டையும் தொழிலாளர் தினமாகிய மேதினத்தில் நினைவு கூர்வதோடு, கடந்தகால நிகழ்கால நிகழ்வுகளையும், எதிர்கால அடிப்படை மாற்றத்தின் அவசியத்தையும் எண்ணிப்பார்க்க வேண்டியது அவசியம்

மனித சமுதாயத்தின் அடிப்படை மாற்றத்திற்கு முதல் வழிகோலிய அக்டோபர் புரட்சிக்குப் பின் இன்று வலுவடைந்து வரும் சமத்துவ சமதர்ம சமுதாய மாற்றம் உலகின் முதலாளித்துவ ஏகாதிபத்தியங்களைக் கிலிகொள்ள வைப்பதுடன் அவர்களின் வீழ்ச்சிக்கும் வழி கோலிக் கொண்டிருக்கின்றது. இந்நிலையில் தடுமாற்றமடைந்து வரும் முதலாளித்துவ ஏகாதிபத்தியங்கள் உலக அமைதியையும், சமாதானத்தையும் உருக்குலைத்து தமது நிலையினை நிலைநிறுத்திக் கொள்ள எத்தனிக்கிறது.

இந்நிலையில், இலங்கையிலும் காலனியாதிக்கத்திற்குப் பின்னல் உள்ள 34 வருட காலங்களிலும் இடம்பெற்ற மாறுதல்களும், நிகழ்வுகளும் இலங்கையின் முழுத் தேசிய ரீதியிலான அடிப்படைப் பிரச்சனைகளிலிருந்து மாறுபட்டு தேசிய இனரீதியிலான பிரச்சனையைக் கூர்மையடைய வைத்துள்ளது. இதற்கான காரண கர்த்தாக்கள் முதலாளித்துவ அரசியல்வாதிகள் என்பது வெளிப்படை. இந்தச் சூழ்நிலையில் இங்கு தோன்றிய கம்யூனிச கட்சிகளும், இடதுசாரி சிந்தனைப் போக்குடைய கட்சிகளும், குழுக்களும் மார்க்சீய-லெனினிய போதனைகளை வெறும் பாடப் புத்தகங்கள் போல் கிரகித்து நடைமுறைப்படுத்த முனைந்தார்களே தவிர, அதன் அடிப்படையான உள்ளாந்தர தன்மையைத் தெளிந்து யதார்த்தமான அணுகு முறைகளை கையாண்டதில்லை. இதனாலேயே இவர்கள் சீரழிந்துபோன நிலையிலுள்ளனர்.

இவைபோன்றே தோன்றிய தொழிற்சங்கங்களும் தொழிலாள வர்க்கத்தின் அடிப்படைப் பிரச்சனைகளைப் பிரதிபலிப்பதிலிருந்து மாறுபட்டு, சுயநலப் பிடிக்குள் சிக்கித் தான்தோன்றித்தனமாகச் செயல்பட்டு வருகின்றனர். இல்லாவிட்டால் வேலை நிறுத்தங்களில் ஈடுபட்டு வேலையிழந்த தொழிலாளர்கள் இன்று நடுத்தெருவில் அலையமாட்டார்கள். இது போன்றே ஆசியாவிலேயே மிகப்பெரிய தொழிற்சங்கமாகிய மலையக தமிழ்த் தொழிலாளர்களின் சங்கம் தனது வர்க்க நலன் (பூர்ஷுவா) பேணும் கைங்கரியத்தில் ஈடுபட்டிருக்க மாட்டாது.

இந்த நிலையில்தான் பாமர பாட்டாளி வர்க்கத்தின் விமோசனத்திற்கான அணுகுமுறைகளை இன்றைய யதார்த்த சூழ்நிலையில் எழுந்துள்ள பிரச்சனையை மையமாகக் கொண்டு, தமிழ்பேசும் மக்களின் தேசிய அந்தஸ்தையும், அவர்களின் சுயாதிபத்திய இறைமையையும் கருத்திற் கொண்டு தமிழ் பேசும் மக்களாகிய ஈழவரின் சமூக பொருளாதார விமோசனத்திற்கு வழிகோலுவதன் மூலம் இலங்கையின் முழுத்தேசிய ரீதியிலான பிரச்சனைக்கும் தீர்வு கிடைக்கும் என்ற நிதர்சனமான நியதியின் நம்பிக்கை அடிப்படையில் நாம் முன்னேறிக் கொண்டிருக்கும் இன்று மேதின நன்னாள் ஈழவர் வரலாற்றில் புதிய சகாப்தத்தின் நம்பிக்கைச் சுடர். இந்த நன்னாளில் பாமர பாட்டாளி வர்க்கத்தின் விமோசன வழிகோலுதலுக்கான எமது பாதையில் திடசங்கற்பம் பூணுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org